# செம்மொழி

திருவள்ளுவர் ஆண்டு 2042 தை - மார்கழி (2011 சனவரி - திசம்பர்)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 7

வெளியீடு: திசம்பர் 2020



# செம்மொழி

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 7**

**திருவள்ளுவர் ஆண்டு 2042 தை - மார்கழி (2011 சனவரி - திசம்பர்)** வெளியீடு: திசம்பர் 2020


## பொருள் நிரல்


வாழ்த்துரை....................................................1

முதன்மை ஆசிரியர் உரை......................2

சங்க கால மகளிர்
– ட. புரேந்தேசுவரி உரை......................3

பயிலரங்குகள்.........................................6

பத்துப்பாட்டின் கவிதையியல்
– கார்த்திகேசு சிவத்தம்பி...................13

கருத்தரங்குகள்......................................21

பணியரங்குகள்......................................31

கூட்டங்கள்...........................................32

செம்மொழி ஆய்வுவட்டக் கூட்டங்கள்....38

இரங்கல் செய்தி
– கார்த்திகேசு சிவத்தம்பி...................42



முதன்மை ஆசிரியர்
**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

ஆசிரியர் குழு
**முனைவர் அ. ஆரோக்கியதாசு**
**முனைவர் த. சரவணன்**

தொழில்நுட்பம்
**திரு. த. செந்தில்குமார்**

வடிவமைப்பு
**திரு. க. சங்கர்**


செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனமாகும். செம்மொழித் தமிழை மேம்படுத்தும் வகையில் தமிழின் தொன்மையையும் தனித்தன்மையையும் அடிப்படையாகக்கொண்டு பத்துச் செயல்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகின்றது.

- 41 பழந்தமிழ் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடல்
- பழந்தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்தல்
- செம்மொழித் தமிழின் மொழி, இலக்கியம், தொல்லியல், கட்டடக்கலை முதலியவை சார்ந்த காட்சிக் குறும்படங்களை உருவாக்கல்
- இணையவழிச் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
- வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம் உருவாக்கல்
- வரலாற்று அடிப்படையிலும் இக்கால நோக்கிலும் தமிழ் வழக்காற்றுச் சொற்களைத் தொகுத்தல்
- செம்மொழித் தமிழ் நூல்களுக்கான தரவகம் உருவாக்கல்
- பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம் நிறுவுதல்
- இந்தியாவை ஒரு மொழிப் புலமாக ஆய்வுசெய்தல்
- செம்மொழித் தமிழின் பல்துறை ஆய்வுகளை மேம்படுத்தல்



முன்னட்டை :
– ஆதிச்சநல்லூர்த் தாய்த் தெய்வம் (வெண்கலம்)
– சிந்துவெளித் தாய்த்தெய்வம்

பின்னட்டை :
– ஆதிச்சநல்லூர்த் தாழியில் புனையப்பெற்ற தாய்த்தெய்வ மண் ஓவியம்


**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
*(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)*
*40, நூறடிச்சாலை, தரமணி, சென்னை-600 113.*
தொலைபேசி: 044-22540125 மின்னஞ்சல்: chemmozhi@cict.in இணையம்: www.cict.in

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு (குறள்–467)

# வாழ்த்துரை



உலகில் பலமொழிகள் தோன்றின. அவற்றில் பல எழுத்தும் பேச்சுமின்றி, வழக்கொழிந்து மறைந்தன. சில மொழிகள் காலத்தால் அழியாமல் நிலைத்து நின்றாலும் மக்கள் பேச்சு வழக்கில் இல்லாமல் எழுத்தளவில் மட்டுமே உள்ளன. ஆனால் பன்னெடுங் காலமாக எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் செல்வாக்குடன் வாழும் மொழியாகத் தமிழ்மொழி உள்ளது. தமிழ், தமிழர் தொன்மைக்குப் பல சான்றுகள் உள்ளன.

சுமேரியாவில் கண்டெடுக்கப்பட்ட தேக்கும் சில ஆடைகளும் கி.மு.3000இல் தென்னாட்டிலிருந்து சென்றிருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அதேபோல் யானைத் தந்தங்கள், வாசனைப் பொருட்கள் போன்றவை கி.மு.2600ஆம் ஆண்டிலேயே எகிப்துக்குச் சென்றிருப்பதற்கான சான்றுகளை ஆய்வாளர்கள் வெளியிடுகின்றனர். அதுபோல், கி.மு.1000இல் வாழ்ந்த சாலமன் அரசனுக்குத் தமிழகத்திலிருந்து பல பொருட்கள் சென்றமைக்கான சான்றுகள் உள்ளன. கி.பி.60இல் பெரிபுளூஸ் எனும் நூல் தமிழகத்தின் பல துறைமுகங்களைப் பதிவுசெய்துள்ளது.

தமிழரின் வாணிபம், அரசியல் முறை, ஆண் பெண் சமத்துவம், கல்வி, மருத்துவம், அறநெறி, அகம் புறம் வாழ்வியல் முறை போன்ற பலவற்றில், மிகவும் முதிர்ந்த பண்பாட்டைக் கொண்ட இனமாகத் தமிழினம் விளங்கியுள்ளதைப் பழந்தமிழ் நூல்களும் கல்வெட்டுகளும் உலகச் சான்றுகளும் உரைக்கின்றன.

சங்க இலக்கியங்கள், தமிழரின் தொல்மரபு மற்றும் பண்பாடுகளைக் குன்றின்மேல் இட்ட விளக்காக எடுத்துரைக்கின்றன. அரசனுக்கே அறிவுரை வழங்கும் ஆற்றல்பெற்ற பெண்பாற் புலவர்களைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இத்தகைய தனிச்சிறப்புகளைக் கொண்ட தமிழ் மொழியையும் தமிழர் பண்பாட்டையும் பல்துறை சார்ந்த நிலையில் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பணிகளையும் தொண்டுகளையும் தாங்கியபடி இச் செம்மொழிச் செய்திமடல் வெளிவருவதை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறேன். என்றும் இளமை குன்றா வளமுடன் வாழும் தமிழ்போல், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

(தெ.ஞானசுந்தரம்)
துணைத்தலைவர்

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மோடு
கொள்ளாத கொள்ளாது உலகு (குறள்-470)

# முதன்மை ஆசிரியர் உரை



சங்க காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராகப் புலமை பெற்றிருந்தனர். பெண்ணுக்கும் ஆணுக்கும் கல்வி பொதுவாகவே இருந்தது.

**கல்வி தறுகண் இசைமை கொடையெனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே** *(தொல்.மெய்.9)*

என்ற தொல்காப்பியர் கூற்றிற்கேற்பப் பெண்கள் நான்கு பெருமிதங்களையும் கொண்டு விளங்கினர். சங்க காலப் பெண்பாற் புலவர்கள் ஆண்பாற் புலவர்களுக்கு நிகராகச் சிறந்து விளங்கினர்.

இவர்களின் சிறப்பைப் போற்றும் வகையில் 'சங்க கால மகளிர்' எனும் தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மிகச் சிறப்பாக நடத்தியது. அக்கருத்தரங்கை நிறுவனத்தின் அப்போதைய துணைத்தலைவரும் நடுவண் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் முன்னாள் இணை அமைச்சருமான மதிப்பிற்குரிய ட. புரந்தேசுவரி அவர்கள் தொடங்கி வைத்துச் சிறப்புரை நிகழ்த்தியுள்ளார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் "செம்மொழி ஆய்வு வட்டம்" எனும் பெயரில் வாரந்தோறும் ஆய்வரங்கம் நடத்தி, அவ்வாய்வரங்கில் பல்துறை சார்ந்த தமிழாய்வுகள் அரங்கேற்றப்பட்டுள்ளன. இந்நிகழ்வு இளம் ஆய்வாளர்களுக்குப் பெரும்பயன் அளித்தது எனலாம். இவ்வாய்வரங்கில் முதுநிலை ஆய்வறிஞர்கள், இளநிலை ஆய்வறிஞர்கள் மற்றும் நிறுவனத்தின் அனைத்துநிலை ஆய்வாளர்கள் பயன்பெற்றதோடு மட்டுமின்றி, வெளி நிறுவனங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வந்த பலருக்கும் இச் செம்மொழி ஆய்வு வட்டம் பெரும் பயனளித்தது மகிழ்ச்சிக்குரியதாகும்.

செம்மொழித் தமிழுக்குச் சிறந்த பங்களிப்பைச் செய்த அறிஞர்களுக்குக் குடியரசுத் தலைவர் விருது ஒவ்வோராண்டும் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 2005-06, 2006-07, 2007-08 ஆகிய ஆண்டுகளுக்கான தொல்காப்பியர் விருது, குறள்பீட விருது, இளம் அறிஞர் விருது ஆகியவை 06.05.2011 அன்று தில்லியில் குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்டன. செம்மொழி விருது வழங்கும் இத்திட்டம், தமிழாய்வுகளில் ஈடுபட்டுவரும் ஆய்வாளர்களுக்குத் தூண்டுதலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

உலகெங்கும் உள்ள தமிழாய்வறிஞர்களை ஒருங்கிணைக்கும் நிறுவனமாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் விளங்குகிறது. இந்நிலையில் உலகெங்கும் உள்ள தமிழியல் ஆய்வாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் 06.07.2011 அன்று கொழும்புவில் உள்ள அவரது இல்லத்தில் உடல்நலக் குறைவினால் காலமானார் என்ற செய்தி, தமிழ்கூறும் நல்லுலகை வேதனையில் ஆழ்த்தியது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆழ்ந்த இரங்கலைப் பதிவு செய்துள்ள மடலாகவும் இம்மடல் வெளிவருகிறது. 2011, ஜனவரி முதல் திசம்பர் வரையிலான காலத்தில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அனைத்து நிகழ்வுகளையும் மேலே கூறியுள்ள செய்திகளையும் தாங்கிய மடலாகச் செம்மொழிச் செய்திமடல்-7 தற்போது வெளிவருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

(இரா. சந்திரசேகரன்)
இயக்குநர்

**ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது**
**தன்னே ரிலாத தமிழ்.**




செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நடத்திய 'சங்க கால மகளிர்' கருத்தரங்கில் நடுவண் மனித வள மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் மாண்புமிகு ட. புரந்தேசுவரி அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை

# சங்க கால மகளிர்

பெருமதிப்புக்கும் பேரன்புக்கும் உரிய மனித வள மேம்பாட்டு அமைச்சக உயர்கல்வித் துறை இணைச்செயலர் முனைவர் அனிதா பட்னாகர் ஜெயின் அவர்களே! பேராசிரியர் மா. நன்னன் அவர்களே! செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஐம்பெருங்குழு உறுப்பினர்களான கவிஞர் வைரமுத்து அவர்களே, பேராசிரியர் பு.பா. இராசராசேசுவரி அவர்களே! எழுத்தாளர் பாமா அவர்களே! செம்மொழி நிறுவன இயக்குநர் பேராசிரியர் ச. மோகன் அவர்களே! நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி அவர்களே! கருத்தரங்கிற்கு வருகைதந்துள்ள அறிஞர் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்குகிறேன்.

தமிழரின் செவ்வியல் இலக்கியக் களஞ்சியமாகிய சங்க இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு சங்ககால மகளிர் பற்றிய மூன்று நாள் கருத்தரங்கினைத் தொடங்கிவைத்து உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகிய பதினெட்டு அரிய நூல்களைக் கொண்ட சங்க இலக்கியம் தமிழரின் தொல்மரபையும் பண்பாட்டு வளத்தையும் உயர்ந்த சிந்தனைகளையும் தன்னுள் கொண்டு அமைந்துள்ளது. 40 பெண்பாற் புலவர்களால் பாடப்பெற்ற பாடல்களை உள்ளடக்கிய சிறப்புடையது. கி.மு. 2 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 2ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட சுமார் 4 நூற்றாண்டுக்கால மக்களைப் பற்றி அறிந்துகொள்ள சங்க இலக்கியம் துணைபுரிகிறது. அக்கால மகளிர் எத்தகைய மனப்பான்மையுடையவர்களாகவும் மாண்புடையவர்களாகவும் அமைந்திருந்தனர் என்பதும் அவர்களின் வாழ்வியலும் வாழ்க்கைத்தரமும் எவ்வாறு அமைந்திருந்தன என்பதும் இப்பாடல்களில் தெளிவாக விளக்கம் பெற்றுள்ளன. அவற்றைப் பற்றிப் பேசவும் ஆராயவும் இத்தகு கருத்தரங்கு ஒன்றை ஏற்படுத்திய செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தையும் இக்கருத்தரங்கில் பங்கேற்றுள்ள பேராளர்களையும் பாராட்டி மகிழ்கிறேன்.

கடந்து வந்த வரலாற்றுப் பாதையைப் பின்னோக்கிக் காணும்போது இந்தியப் பெண்களின் நிலை சமூகத்தில் மேம்பட்டு இருந்ததென்பது தெளிவாகத் தெரியவருகிறது.

- அல்டேகர் (Altekar), கோசாம்பி (Kosambi), குர்யே (Kurye), ராதா குமுத் முகர்ஜி (Radha Kumudh Mukherji) முதலிய அறிஞர்கள் வேதகாலத்தில் பெண்களின் நிலை மேன்மையுற்றிருந்தது எனக் குறிப்பிடுகின்றனர்.
- ரிக் வேதத்தில் காணப்படும் 20 பாடல்கள் பெண்களால் இயற்றப்பட்டவை. லோபமுத்ரா, கோசா, அபலா, ஸூர்யா, யமி, இந்திராணி, சர்ப்பரஜனி, ஊர்வசி என்று இந்தப் பெண் கவிஞர்களின் பட்டியல் நீள்கிறது.
- பெண்ணின் திருமணத்திற்குரிய தகுதிகளில் கல்வி முதன்மையானதாகக் கருதப்பட்டது.
- ஆண்களைப் போன்று பெண்களும் குருகுலவாசத்திற்குச் சென்று கல்வி பயின்றனர்.

சங்ககாலத் தமிழ்ச் சமுதாயத்தில் மகளிர் தமக்கே உரிய சிறந்த இடத்தைப் பெற்றிருந்தனர். பெண்ணுரிமை பேணப்பட்ட அக்காலத்தில் பெண்ணடிமைத்தனம் தோன்றியிருக்கவில்லை. சமூகத்தில் பெண் சிசுக்கொலை, பெண் கல்வி மறுப்பு, குடும்பத்தில் பெண் எதிர்கொள்ளும்

சிக்கல்கள், இரட்டைப் பணிச்சுமை, சமமான ஊதியமின்மை, பணியிடங்களில் எதிர்கொள்ளும் பாலியல் சிக்கல்கள், பெண்ணைச் சந்தைப் பொருளாக்கிப் பார்க்கும் வாணிக நோக்கு போன்ற இன்றைய சிக்கல்கள் காணப்பெறாத காலம் சங்ககாலம். சங்ககாலச் சமுதாயம் மகளிரைப் பொறுத்தவரை பொற்காலம் என்பதில் ஐயமில்லை. சங்ககால நூல்களில் கல்வி சிறப்பித்துப் பேசப்படுகிறது. சங்ககாலத்தில் பெண்கள் புலமையுடையோராய்ச் சிறந்து விளங்கிப் பல பாடல்களைப் புனைந்துள்ளனர்.

- ஔவையார், வெள்ளிவீதியார், நச்செள்ளையார், வெறிபாடிய காமக்கண்ணியார் எனப் பெண்பாற் புலவர்களின் பட்டியல் நீள்கிறது.
- அரசியல், வரலாறு, தொழில், சோதிடம், வானவியல், தத்துவம், சமுதாயம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் இவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதை இவர்களது பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

பண்டைக் காலத்தில் உலகம் முழுவதிலும் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்த பெண்கள் காலம் செல்லச் செல்லத் தன்னிலை இழந்து, சமூக மதிப்பீட்டிலிருந்து தாழ்ந்தனர். இவற்றிலிருந்து மீளப் பெண்கள் போராட வேண்டி இருந்தது. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் இந்தியாவிலும் உலக அளவிலும் பெண் விடுதலை இயக்கங்கள் எழுந்தன.

- பிரம்ம சமாஜம் இராஜாராம் மோகன்ராய் என்பவரால் 1828ஆம் ஆண்டு கொல்கத்தாவில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பல்வேறு கொடுமைகளை நீக்கப் போராடியது.
- குழந்தைத் திருமணத்திற்கு எதிராகப் போராடியவர்களுள் முதன்மையானவர் பிரம்ம சமாஜத்தின் தலைவரும் சீர்திருத்தவாதியுமான கேசவசந்திரசென்.
- வேதங்களுக்கு முரணானது குழந்தை மணம் என்று கூறிய இவரது இடையறா முயற்சியின் விளைவாக 1827இல் கொண்டுவந்த பிரம்ம சமாஜ சட்டம் குழந்தைகள் மணத்தைத் தடைசெய்தது.
- 1829ஆம் ஆண்டு இராஜாராம் மோகன்ராய் அவர்களின் முயற்சியாலும் ஆங்கில அரசின் ஒத்துழைப்பாலும் பெண்கள் உடன்கட்டை ஏறும் 'சதி' என்னும் வழக்கம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.
- விதவைகள் மறுமணம் செய்துகொள்ளச் சமூகம் அனுமதியளிக்க வேண்டும்; பலதார மணம் தடைசெய்யப்பட வேண்டும்; பெண்கள் பொதுவாழ்க்கையில் பங்குபெற வேண்டும்; சுதந்திரம், சமத்துவம் என்ற கொள்கைகள் குடும்பம், சமூகம் ஆகிய இரு தளங்களிலும் முறையாகச் செயல்பட வேண்டும் .

என்பன வலியுறுத்தப்பட்டன.

வட இந்தியாவில் வேர்விட்ட பெண் உரிமைச் சிந்தனையைப் போலவே தமிழகத்திலும் பெண்விடுதலை உணர்வு தலைதூக்கியது.

தமிழகத்தில் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பிய சான்றோர் **ஈ.வெ.ரா. பெரியார்.**

- பெண்கள் ஆண்மை என்னும் தத்துவத்தை முற்றிலுமாகக் களையெடுக்கும் வரை அவர்கள் அடிமைப்படும் சூழல் மாறாது.
- அலங்காரப் பிரியைகளாக இல்லாமல், பெண்கள் கல்வி பெறவேண்டுமென்ற ஆர்வமுடையவராய் விளங்க வேண்டும்.
- ஆண்கள் கல்வி கற்ற பெண்களையே மணந்துகொள்ள முன்வர வேண்டும். தாங்கள் அடிமைப்படுத்தப்படவே கல்வி தங்களுக்கு மறுக்கப்படுகிறது என்பதனைப் பெண்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.
- பெண்கள் நாட்டுப் பணியிலும் அரசியலிலும் தொழிற் கல்வியிலும் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும்.
- பெண்கள் சமையலறையை விட்டு வெளிவரவேண்டும். மக்கள் தொகையின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப் பெறவேண்டும்.
- பெண்களுக்குச் சொத்துரிமை உண்டு என்று இந்திய அரசு சட்டம் கொண்டு வந்தது ஏற்புடையது; விதவைப் பெண்ணுக்கும் கணவனின் சொத்தில் உரிமையுண்டு; அவள் மறுமணம் புரிந்துகொண்டாலும் முதற்கணவனின் சொத்தில் அவளுக்கு உரிமை உண்டு.

என்பன பெரியாரின் முதன்மையான பெண்ணியச் சிந்தனைகள்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அண்ணல் அம்பேத்கார் பெண் உரிமை பேசிய அறிஞர். அவர்,

- வயதுவந்தோர்க்கு வாக்குரிமை, பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் இந்து சட்ட மசோதா போன்ற சட்ட மசோதாக்களைக் கொண்டுவந்தார்.
- குடும்ப உறவுகளில் கணவனுக்கு மனைவி அடிமை என்ற நிலையை ஒழிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.
- பெண்விடுதலை பெற்றாலன்றி ஆண்களின் விடுதலை இல்லை என்றார்.

இந்தப் பாதையில் பயணித்த சான்றோர்களுள் ஒருவர் திரு.வி.கல்யாணசுந்தரனார். 'பெண்ணின் பெருமை' என்னும் நூலில் 'ஒரு நாட்டு நலன் அந்நாட்டுப் பெண் மக்கள் நிலையைப் பொறுத்ததே' எனக் குறிப்பிட்டிருக்கும் பாங்கு பெண்கள் உரிமைபெற வேண்டும் என்ற கருத்தில் அவர்க்கு இருந்த ஈடுபாட்டை உணர்த்தும்.

பாரதியார் தம் காலத்தில் வேரூன்றிக் கிடந்த ஆணாதிக்கக் கருத்தியலுக்கு எதிரான மாற்றுச் சிந்தனையைச் சமுதாயத்தில் விதைக்க முயன்றார். தன்னுடைய கவிதைகள், கட்டுரைகள் மூலமாகப் பெண்ணடிமைத்தனத்தை மாற்ற விழைந்தார். கற்பு என்னும் சமுதாயக் கைவிலங்கை ஏற்றுச் சமையலறையே தன்னிருப்பிடம் என எண்ணி வாழ்ந்துகொண்டிருக்கும் பெண்ணினம், தங்களுக்கு நிகழ்ந்திருக்கிற அநீதியை உணர்ந்து தாங்களாகவே அதிலிருந்து மீள முயற்சிக்க வேண்டும். இதுவே பெண் விடுதலைக்கான முதற்படி என்று கருதினார்.

பாரதி வகுத்துத் தந்த பாதையில் வழிநடந்த பாரதிதாசனும் பெண்விடுதலைக்குப் பாடுபட்டார். பெண்கல்வி, பெண்ணுக்குப் பேச்சுரிமை, பால்பேதமற்ற சமுதாயத் தகுதி ஆகியவற்றுடன் விதவை மறுமணத்தையும் ஆதரித்தார்.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் தமிழகத்தில் குறிப்பிடத்தகுந்த பலர் பெண்களின் மாற்றத்திற்கு வழிகோலினர்.

கேப்டன் இலட்சுமி சேகல், அன்னிபெசண்ட் அம்மையார்,

தில்லையாடி வள்ளியம்மை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, ருக்மணி லட்சுமிபாய், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், குஞ்சிதம்மாள், சகோதரி சுப்புலட்சுமி, டாக்டர் எஸ். தருமாம்பாள்

இப்பெண்கள் அனைவருமே தமிழகத்தில் விளிம்பு நிலையில் வாழ்ந்துகொண்டிருந்த பெண்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வழிகோலிய சாதனைப் பெண்மணிகள்.

சமுதாயப் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட பெண்மணிகளைப் போலவே எழுத்தாலும் பெண் முன்னேற்றத்திற்குக் குரலெழுப்பிவரும் பெண்கள் பலருண்டு. வலிமையான எழுத்து என்னும் ஆயுதம் கொண்டு படைப்பாளிகள் பெண்களிடையே மாற்றங்களைக் கொண்டுவர முயற்சி செய்தனர். பெண் படைப்பாளிகள் பலர் பெண்கள் எதிர்கொள்ளும் குடும்ப, சமுதாயச் சிக்கல்கள், அதற்கான தீர்வுகள், பெண்களின் முன்னேற்றம், பெண்களிடையே விழிப்புணர்வைத் தூண்டுதல் போன்ற மையக் கருத்துக்களைத் தமது படைப்புக்களில் கையாண்டுள்ளனர். இவர்களது படைப்புக்கள் புதினங்களாகவும் சிறுகதைகளாகவும் நாடகங்களாகவும் கவிதைகளாகவும் பல்வேறு வடிவங்களோடு பரிணமிக்கின்றன. வை.மு. கோதைநாயகி அம்மாள், குமுதினி, சேது அம்மாள், பூரணி அம்மையார், அசலாம்பிகை அம்மையார், கவிஞர் அனந்தம்மாள், ஹா.கி.வாலம், சித்தி ஜுனைதா பேகம், வசுமதி இராமசாமி, லஷ்மி, அநுத்தமா, சூடாமணி, ஜோதிர்லதா கிரிஜா, இராஜம் கிருஷ்ணன், அம்பை, சிவசங்கரி, பாமா எனப் படைப்பாளிகள் பலர்.

இன்றைய சமுதாய மாற்றத்திற்கு இன்றியமையாத கூறுகளுள் ஒன்று கல்வி. நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் ஏற்பட்ட சமூக மாற்றங்களால் பெண்ணுக்குக் கல்வியறிவு ஊட்டப்பெற்றது. இன்றைய கல்விக்கொள்கை இரண்டு சவால்களை எதிர்நோக்கி அமைந்திருக்கிறது. ஒன்று வளமான எதிர்காலத்தை உருவாக்குதல், மற்றொன்று நிறைவேறாத பல பணிகளை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையை 21ஆம் நூற்றாண்டில் உருவாக்குதல்.

- இந்திய அரசாங்கம் தனது நலத்திட்டங்களில் பெண்கல்விக்குப் பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்து பெண் கல்வி வளர்ச்சிக்கு வழிகோலி வருகிறது. இதன் விளைவாக 2011ஆம் ஆண்டின் இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பெண்கள் கல்வி கற்கும் விகிதம் ஆண்களோடு ஓரளவு ஒப்பிடக்கூடிய வகையில் உயர்ந்திருக்கின்றது.
- 2011ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி கல்வியறிவு பெற்றோரின் மொத்த சதவிகிதம் 74.04%. அதில் ஆண்கள் 82.4%, பெண்கள் 65.4% பெற்றுள்ளனர்.
- தமிழ்நாட்டில் பெண்கள் 73.9% கல்வியறிவு பெற்றுள்ளனர்.
- பெண் கல்வி முன்னேற்றம் அடைவதற்குச் சமுதாய, பொருளாதார, பண்பாட்டுச் சூழல் மாற்றங்களும் அரசாங்கத்தின் பெண்கல்வி மேம்பாட்டிற்கான நலத்திட்டங்களுமே அடிப்படைக் காரணிகளாகின்றன.

இன்றைய இந்தியச் சமுதாயத்தில் பெண்கள் கல்வி, பணி, தலைமைப் பொறுப்பு, பொருளாதாரத் தன்னிறைவு, அரசியல் பங்கேற்பு, கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பெற்றிருக்கும் நிலையில் பெண்கள் மசோதா நிறைவேற்றம் மேலும் பல மேம்பாடுகளைத் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

இத்தகைய சூழலில் காலந்தோறும் அரும்பெரும் பணிகளில் ஈடுபட்டு வரும் பெண்களைப் பற்றிய ஆய்வுக்கு முன்னோடியாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சங்ககால மகளிர் பற்றிய கருத்தரங்கை ஏற்பாடு செய்திருப்பதில் மிக்க மகிழ்ச்சிகொண்டு இக்கருத்தரங்கைத் தொடங்கிவைக்கிறேன்.

நன்றி

வணக்கம்!

## ஐ.எஸ்.ஓ. கூட்டம்



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 06.07.2011 அன்று ஐ.எஸ்.ஓ. தொடர்பான கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் நிறுவனப் பணியாளர்கள் கலந்துகொண்டார்கள்.

பயிலரங்கம் 1

## சங்க இலக்கியப் பதிப்புகளும் ஆய்வு வரலாறும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையின்கீழ் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறை 'சங்க இலக்கியப் பதிப்புகளும் ஆய்வு வரலாறும்' என்னும் தலைப்பில் 03.01.2011 முதல் 12.01.2011 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தியது.

இந்தப் பயிலரங்கின் தொடக்க விழா 03.01.2011 அன்று முற்பகல் 11 மணியளவில் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆளவை மன்றத்தில் நடந்தது. இவ்விழாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழக இந்திய மொழிப்புல முதன்மையர் பேராசிரியர் பழ. முத்துவீரப்பன் வரவேற்புரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் மா. இராமநாதன் தலைமையுரையாற்றினார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி தொடக்கவுரையாற்றினார். சென்னைப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் பொற்கோ மையக்கருத்துரை வழங்கினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறைப் பேராசிரியர் மு. வள்ளியம்மை நன்றி நவிலத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இந்தப் பயிலரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**பேராசிரியர் இரா. மோகன்**
**பேராசிரியர் நிர்மலா மோகன்**
**பேராசிரியர் க. பஞ்சாங்கம்**
**பேராசிரியர் ஆ. ஆலிஸ்**
**முனைவர் மா. சற்குணம்**
**முனைவர் அமுத. இளவழகன்**
**பேராசிரியர் இலட்சாராமன்**
**முனைவர் சு. திருஞானசம்பந்தம்**
**முனைவர் சிவ. மாதவன்**
**பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்**
**பேராசிரியர் செ.வை. சண்முகம்**
**பேராசிரியர் அரு. மருததுரை**
**பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்**
**முனைவர் ஆ. மணி**
**பேராசிரியர் சா. வளவன்**
**பேராசிரியர் வ. குருநாதன்**
**பேராசிரியர் ம.சா. அறிவுடைநம்பி**
**முனைவர் க. பலராமன்**
**பேராசிரியர் மு. பாண்டி**
**முனைவர் மா. நடராஜன்**
**முனைவர் பா. ஆனந்தகுமார்**
**முனைவர் அர்த்தநாரீசுவரன்**
**முனைவர் சு. இராசாராம்**
**பேராசிரியர் அ. அறிவுநம்பி**
**பேராசிரியர் பி. ஜெயதேவன்**
**முனைவர் பா. ஜெய்கணேஷ்**
**பேராசிரியர் இராமகுருநாதன்**
**முனைவர் சிவச்சந்திரன்**
**பேராசிரியர் பழ. முத்தப்பன்**
**பேராசிரியர் மு. வள்ளியம்மை**
**பேராசிரியர் பழ. முத்துவீரப்பன்**
**முனைவர் அ. சதீஸ்**
**பேராசிரியர் பி. நசீம்தீன்**
**பேராசிரியர் பா. மதிவாணன்**
**முனைவர் இரா. தாமோதரன்**

12.01.2011 அன்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் பேராசிரியர் மு. வள்ளியம்மை வரவேற்புரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் மா. இரத்தினசபாபதி தலைமையுரையாற்றிப் பயிலரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். கலைஞர் உலகச் செம்மொழிகள் உயராய்வு மைய இயக்குநர் பேராசிரியர் சோ.ந. கந்தசாமி நிறைவுப்பேருரை நிகழ்த்தினார். இறுதியாகப் பேராசிரியர் பழ. முத்துவீரப்பன் நன்றிகூறப் பயிலரங்கம் இனிதே நிறைவுற்றது.

★

பயிலரங்கம் 2

## சங்க இலக்கியம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி ஜமால் முகம்மது கல்லூரியும் இணைந்து 'சங்க இலக்கியம்' என்னும் பொருண்மையில் 03.01.2011 முதல் 12.01.2011 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

★

பயிலரங்கம் 3

## இலக்கணவியல், இலக்கியவியல், சமயவியல் நோக்கில் மணிமேகலை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரித் தமிழியற்புலமும் இணைந்து 'இலக்கணவியல், இலக்கியவியல், சமயவியல் நோக்கில் மணிமேகலை' என்னும் தலைப்பில் 03.01.2011 முதல் 12.01.2011 முடிய பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

★

பயிலரங்கம் 4

## திருக்குறளும் உரைகளும்: ஆய்வுக் களங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையும் இணைந்து 'திருக்குறளும் உரைகளும்: ஆய்வுக் களங்கள்' என்னும் தலைப்பில் 18.01.2011 முதல் 28.01.2011 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின.

★

பயிலரங்கம் 5

## தொல்காப்பியம் – மரபுவழிப் பார்வையும் மொழியியல் பார்வையும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் புதுவைப் பல்கலைக்கழகச் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம் 'தொல்காப்பியம் - மரபுவழிப் பார்வையும்

மொழியியல் பார்வையும்' என்னும் தலைப்பில் 19.01.2011 முதல் 29.01.2011 முடிய பத்து நாள் பயிலரங்கை நடத்தியது.

பேராசிரியர் இரா. கோதண்டராமன்
பேராசிரியர் புனல் க. முருகையன்
பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்
முனைவர் தி. செல்வம்
பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியம்
முனைவர் இந்திரா மனுவேல்
முனைவர் சு. அழகேசன்
பேராசிரியர் ஆ. திருநாகலிங்கம்
முனைவர் ஆ. தசரதன்
முனைவர் ய. மணிகண்டன்
முனைவர் மு. பாண்டி
முனைவர் சிவ. மாதவன்
பேராசிரியர் பெ. மாதையன்
பேராசிரியர் ப. மருதநாயகம்
முனைவர் வா.மு.சே. ஆண்டவர்
பேராசிரியர் எஸ். ஆரோக்கியநாதன்
முனைவர் இரா. சம்பத்
பேராசிரியர் வ. ஞானசுந்தரம்
பேராசிரியர் சு. இராசாராம்
பேராசிரியர் கி. அரங்கன்
முனைவர் ஆ. கார்த்திகேயன்
முனைவர் அமுதன் அடிகள்
முனைவர் இரா. ஜெயராமன்
முனைவர் சிவசுப்பிரமணியன்
முனைவர் உல்ரிக் நிக்லோஸ்
முனைவர் க. சுந்தரபாண்டியன்
முனைவர் இராம. இராமமூர்த்தி
இரா. விவேகானந்தகோபால்
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
முனைவர் ந. கலைவாணி
பேராசிரியர் தமிழவன்
முனைவர் இரா. கண்ணன்






ஆகிய அறிஞர்கள் இப்பயிலரங்கில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

**பயிலரங்கம் 6**

## பன்முக நோக்கில் செம்மொழித் தமிழ்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழ்நாடு அரசு மதுரை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துறையும் இணைந்து 'பன்முக நோக்கில் செம்மொழித் தமிழ்' என்னும் தலைப்பில் 20.01.2011 முதல் 01.02.2011 வரை பத்து நாள் பயிலரங்கினை அரசு அலுவலர்களுக்காக நடத்தின.

இப்பயிலரங்கின் தொடக்க விழா 20.01.2011 அன்று காலை பத்து மணியளவில் மதுரை மாவட்ட ஊராட்சித் தலைவர் அலுவலக அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் மதுரை மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் முனைவர் க. பசும்பொன் வரவேற்புரையாற்றினார். மதுரை மாவட்ட ஆட்சியர் சி. காமராசு இ.ஆ.ப. தலைமையுரையாற்றினார். தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் கூ.வ. எழிலரசு விழாப் பேருரை நிகழ்த்தினார். அவ்வுரையில் அவர், உலகிலேயே நன்கு செப்பம் செய்யப்பட்ட மொழியான தமிழின் பெருமையை மேலை நாட்டவர்கூட அறிந்து போற்றிய நிலையில் நாம் தமிழின் பெருமையை அறியாமல் இருக்கிறோம். பழைய வரலாற்றை அறிய உதவுவது ஆவணத் தமிழே ஆகும். கல்லணை யாரால் கட்டப்பட்டது என்பதை ஆவணங்கள் மூலமே அறிகிறோம். அத்தகைய ஆவணங்களை வருங்காலத் தமிழ்த் தலைமுறை அறிய வேண்டாமா? அதை அரசுப் பணியாளர்கள் ஆங்கிலத்தில் எழுதுவது முறையல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றார். இவரைத் தொடர்ந்து நடுவணரசின் பெட்ரோலியம் மற்றும் எரிவாயு அமைச்சகத்தின் ஊழல் தடுப்புத் தலைமை அலுவலர் இரெ. பாலகிருட்டிணன் இ.ஆ.ப. சிறப்புரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி பயிலரங்க மைய உரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் ந. அரணமுறுவல் முன்னிலையுரையாற்றினார். மதுரை மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா. அண்ணா நன்றிநவிலத் தொடக்க விழா நிறைவுற்றது.

இப்பயிலரங்கில் பின்வரும் அறிஞர்கள் பங்கேற்றுத் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

பேராசிரியர் செ.வை. சண்முகம்
பேராசிரியர் செ. சண்முகம்
பேராசிரியர் தமிழண்ணல்
பேராசிரியர் தி.சு. நடராசன்
பேராசிரியர் இராம. சுந்தரம்
பேராசிரியர் மு. இராமசுவாமி
பேராசிரியர் வீ. ரேணுகாதேவி
பேராசிரியர் பொன். சுப்பையா
முனைவர் முத்துக்கிருட்டிணன்
முனைவர் மு. அஞ்சலி அன்னாபாய் ராசசேகர்
பேராசிரியர் வி. திருவள்ளுவன்
பேராசிரியர் ஆ.கோ. நடராசன்
முனைவர் இராம. பாண்டுரங்கன்

பேராசிரியர் இரா. மோகன்
பேராசிரியர் கு. சிவமணி
பேராசிரியர் நடராசப்பிள்ளை
முனைவர் கு. ஞானசம்பந்தன்
முனைவர் லி. இராமமூர்த்தி
பேராசிரியர் வே. தயாளன்
முனைவர் சுந்தர ஆவுடையப்பன்
பேராசிரியர் கணேசன்
முனைவர் கு. சின்னப்பா
முனைவர் இரா. கு. அழகேசன்
முனைவர் க. பசும்பொன்
முனைவர் பெ. சந்திரா
முனைவர் கா.மு. சேகர்
முனைவர் க. முத்தையா
முனைவர் மு. பாலகுமார்
முனைவர் வேல். கார்த்திகேயன்
முனைவர் இரா. செகதீசன்
பேராசிரியர் வ. ஜெயா
முனைவர் அனந்தம்மாள்
பேராசிரியர் இராதாகிருட்டிணன்
முனைவர் நடராசன்
முனைவர் கோ. செழியன்
முனைவர் ந. அரணமுறுவல்
முனைவர் அ. தனலட்சுமி

02.02.2011 அன்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் மதுரை மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் க. பசும்பொன் வரவேற்புரையாற்றினார். மதுரை மாவட்ட ஆட்சியர் சி. காமராஜ் இ.ஆ.ப. தலைமைதாங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் ச. மோகன் சிறப்புரையாற்றினார். முனைவர் க. பசும்பொன், முனைவர் அய்யங்காளை, முனைவர் வீ. ரேணுகாதேவி ஆகியோர் தொகுத்த ‘செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் கற்பு நெறி’ எனும் நூலை ஆட்சியர் வெளியிடத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ம. இராசேந்திரன் அதைப் பெற்றுக்கொண்டு நிறைவுரை நிகழ்த்தினார். அவ்வுரையில் அவர், தமிழர் மரபு தொன்மையானது. தமிழரின் விளையாட்டான சிலம்பாட்டத்தின் அசைவுகளையும் சுழற்றும் முறைகளையும் காட்சிப்படுத்தினால் தமிழ் எழுத்துக்களைக் காணமுடியும். சிலம்பு தற்காப்புக் கலைதான். அதைப்போன்று எழுத்து என்பதும் மனிதனின் தற்காப்புக் கலைதான் என்றார். இவரைத் தொடர்ந்து தேனி மாவட்ட வருவாய் அலுவலர் இரா. பிருந்தாதேவி, மதுரை வானொலி நிலைய நிகழ்ச்சிப் பொறுப்பு அலுவலர் சுந்தர ஆவுடையப்பன், தமிழிசை மன்ற முதுநிலை அறங்காவலர் சு. மோகன் காந்தி ஆகியோர் கருத்துரை வழங்கினர். இறுதியாகச் செய்தி மக்கள் தொடர்பு உதவி அலுவலர் கதிரவன் நன்றிகூற விழா இனிதே நிறைவடைந்தது.

★

பயிலரங்கம் 7

## சிலப்பதிகாரம் காட்டும் நாட்டுப்புறவியல் மரபும் இலக்கிய மரபும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து ‘சிலப்பதிகாரம் காட்டும் நாட்டுப்புறவியல் மரபும் இலக்கிய மரபும்’ என்னும் தலைப்பில் 25.01.2011 முதல் 03.02.2011 முடிய பத்து நாள் பயிலரங்கை நடத்தின. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் இர. மனுவேல் இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

முனைவர் பி. தனஞ்செயன்
முனைவர் ஆர். பிரபாகரன்
முனைவர் கரு.அழ. குணசேகரன்
முனைவர் சு. சந்திரா
திருமதி ஜி. வில்லிபாய்
முனைவர் எஸ். வேணு
முனைவர் பெ. அர்த்தநாரீசுவரன்
முனைவர் வேல். கார்த்திகேயன்
முனைவர் டி.எஸ். மல்லிகா
முனைவர் அரங்க. இராமலிங்கம்
பேராசிரியர் டாக்டர் பி. நசீம்தீன்
முனைவர் பத்மாவதி விவேகானந்தன்
திரு எஸ். சேகர்
முனைவர் எ. ஜெகதீசன்
பேராசிரியர் இர. மனுவேல்
பேராசிரியர் ஜா. மனுவேல்
முனைவர் ப. அம்முதேவி
முனைவர் மு. மாலதி
முனைவர் மோ. ஜான் ஜெபராஜ்
முனைவர் வி.ஜி. சொக்கலிங்கம்

ஆகிய அறிஞர்கள் இப்பயிலரங்கில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

பயிலரங்கம் 8

## தொல்காப்பிய இலக்கியவியல் கொள்கைகளும் கோட்பாடுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் விருத்தாசலம் திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரியும் இணைந்து ‘தொல்காப்பிய இலக்கியவியல் கொள்கைகளும் கோட்பாடுகளும்’ என்னும் தலைப்பில் 31.01.2011 முதல் 09.02.2011 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின.

★

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அறிவிப்புகள்,
வெளியீடுகள் பற்றித் தெரிந்துகொள்ள
கீழ்க்காணும் இணையத்தளத்தைப் பார்வையிடவும்
www.cict.in

பயிலரங்கம் 9

## தொல்காப்பிய ஆய்வுக் களங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் இணைந்து 'தொல்காப்பிய ஆய்வுக் களங்கள்' என்னும் தலைப்பில் 02.02.2011 முதல் 11.02.2011 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின.





★

பயிலரங்கம் 10

## வரலாற்று நோக்கில் செவ்வியல் அற இலக்கியங்களும் அறக் கோட்பாடுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் அரியலூர் மீனாட்சி இராமசாமி கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'வரலாற்று நோக்கில் செவ்வியல் அற இலக்கியங்களும் அறக் கோட்பாடுகளும்' என்னும் தலைப்பில் 02.02.2011 முதல் 11.02.2011 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின.





★

பயிலரங்கம் 11

## செம்மொழித் தமிழ் இலக்கணக் கோட்பாட்டிற்கு உரையாசிரியர்களின் பங்களிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறை 'செம்மொழித் தமிழ் இலக்கணக் கோட்பாட்டிற்கு உரையாசிரியர்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் 16.02.2011 முதல் 25.02.2011 முடிய பத்து நாள் பயிலரங்கை நடத்தியது.

இப்பயிலரங்கின் தொடக்க விழா 16.02.2011 அன்று காலை 10 மணியளவில் பட்டமளிப்பு விழாக் கலையரங்கக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இவ்விழாவில் அழகப்பா பல்கலைக்கழகக் கலைப்புல முதன்மையர் முனைவர் மு. பாண்டி வரவேற்புரையாற்றினார். அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சேது. சுடலைமுத்து தலைமையுரையாற்றினார். அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் கா. மணிமேகலை வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் ச. குருசாமி 'தொல் உரைநெறிகள்' என்னும் தலைப்பில் தொடக்கவுரையாற்றினார். மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் க.ப. அறவாணன் 'உரைகள்: காலத்தின் பாலம்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். அழகப்பா பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் முனைவர் இரா. தாமோதரன் நன்றியுரையாற்றத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இப்பயிலரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

- பேராசிரியர் ம. கார்மேகம்
- பேராசிரியர் இரா. சீனிவாசன்
- பேராசிரியர் பெ. மாதையன்
- பேராசிரியர் ஆ. திருநாகலிங்கம்
- பேராசிரியர் சு. இராசாராம்
- பேராசிரியர் பி. சீனிவாசன்
- பேராசிரியர் சீ. பக்தவத்சல பாரதி
- பேராசிரியர் பழ. முத்துவீரப்பன்
- பேராசிரியர் சிலம்பு நா. செல்வராசு
- பேராசிரியர் தி. செல்வம்
- முனைவர் பா. இளமாறன்

முனைவர் தி. அன்புச் செல்வன்
பேராசிரியர் இராம. சுந்தரம்
முனைவர் க. சுந்தரபாண்டியன்
பேராசிரியர் எஸ். ஆரோக்கியநாதன்
முனைவர் க. அமுதா
முனைவர் இரா. அறவேந்தன்
பேராசிரியர் இரா. செயராமன்
பேராசிரியர் பா. மதிவாணன்
பேராசிரியர் அறவாணன் தாயம்மாள்
பேராசிரியர் சு. அழகேசன்
பேராசிரியர் ந. சண்முகம்
பேராசிரியர் சிவ. மாதவன்
முனைவர் ஜெ. சியாமளா
முனைவர் ஆ. மணி
பேராசிரியர் இரா. மோகன்
பேராசிரியர் ஏ. ஆதித்தன்
முனைவர் மு. பாண்டி
பேராசிரியர் மா. சற்குணம்
பேராசிரியர் சு. இராசாராம்
பேராசிரியர் க. பஞ்சாங்கம்
பேராசிரியர் தெ. முருகசாமி
முனைவர் பி. வேல்முருகன்
பேராசிரியர் தூ. சேதுபாண்டியன்
பேராசிரியர் நெல்லை ந. சொக்கலிங்கம்
முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை

25.02.2011 அன்று மாலை இப்பயிலரங்கின் நிறைவு விழா நடைபெற்றது. அழகப்பா பல்கலைக்கழகக் கலைப்புல முதன்மையர் முனைவர் மு. பாண்டி வரவேற்புரையாற்றினார். அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சேது சுடலைமுத்து தலைமையுரையாற்றினார். அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் கா. மணிமேகலை வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் செ.வை. சண்முகம் இறைச்சிக் கோட்பாடு என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி நிறைவுப் பேருரை நிகழ்த்தினார். முனைவர் இரா. தாமோதரன் நன்றிநவிலப் பயிலரங்கம் இனிதே நிறைவடைந்தது.

★

பயிலரங்கம் 12

## தொல்காப்பிய மரபும் சங்க இலக்கியத் திறனும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நாடார் மஹாஜன சங்கம் ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'தொல்காப்பிய மரபும் சங்க இலக்கியத் திறனும்' என்னும் தலைப்பில் 16.02.2011 முதல் 25.02.2011 முடிய பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

★

பயிலரங்கம் 13

## காலந்தோறும் தமிழ்மொழி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையமும் இணைந்து 'காலந்தோறும் தமிழ்மொழி' என்னும் தலைப்பில் 02.03.2011 முதல் 11.03.2011 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

பேராசிரியர் செ.வை. சண்முகம்
முனைவர் க. பசும்பொன்
பேராசிரியர் வீ. ரேணுகாதேவி
முனைவர் த. நெடுஞ்செழியன்
முனைவர் மு. சிவக்குமார்
பேராசிரியர் ஆ. கோ. நடராசன்
முனைவர் ஆ. கார்த்திகேயன்
முனைவர் அ. காமாட்சி

ஆகிய அறிஞர்கள் இப்பயிலரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

பயிலரங்கம் 14

## பண்பாட்டியல் நோக்கில் பண்டைத் தமிழர் சமயம் - வழிபாடு - நம்பிக்கைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து 'பண்பாட்டியல் நோக்கில் பண்டைத் தமிழர் சமயம்- வழிபாடு - நம்பிக்கைகள்' என்னும் பொருளில் 02.03.2011 முதல் 12.03.2011 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

பேராசிரியர் இ. முத்தையா
பேராசிரியர் ஆ. தனஞ்செயன்
பேராசிரியர் அ. பாண்டுரங்கன்
பேராசிரியர் க. பஞ்சாங்கம்
முனைவர் சீ. பக்தவத்சல பாரதி
பேராசிரியர் பெ. மாதையன்
பேராசிரியர் ப. மருதநாயகம்
பேராசிரியர் சிவ. மாதவன்
பேராசிரியர் இரா. மதிவாணன்
பேராசிரியர் ஆறு. இராமநாதன்
பேராசிரியர் நா. இராமச்சந்திரன்
பேராசிரியர் நா. இளங்கோ
பேராசிரியர் க. நெடுஞ்செழியன்
பேராசிரியர் ஞா. ஸ்டீபன்
பேராசிரியர் பா. ஆனந்தகுமார்
பேராசிரியர் த. பழமலய்
திரு செந்தீ நடராசன்
பேராசிரியர் அ.கா. பெருமாள்
முனைவர் ச. பிலவேந்திரன்
திரு கே.கே.ஏ. வெங்கடாச்சாரி
பேராசிரியர் இரா. இலட்சாராமன்
திரு ரெங்கையா முருகன்
பேராசிரியர் ஒ. முத்தையா
முனைவர் ராஜ்கௌதமன்
முனைவர் மே.து. இராசுகுமார்
பேராசிரியர் ம. இராசேந்திரன்
பேராசிரியர் க.ப. அறவாணன்
பேராசிரியர் பொன். கோதண்டராமன்
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
பேராசிரியர் எஸ். ஆரோக்கியநாதன்

ஆகிய அறிஞர்கள் இப்பயிலரங்கில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

பயிலரங்கம் 15

## தொல்காப்பிய இலக்கியவியல் கொள்கைகளும் சங்க இலக்கியங்களும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கிருட்டிணகிரி அரசுக் கலைக்கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'தொல்காப்பிய இலக்கியவியல் கொள்கைகளும் சங்க இலக்கியங்களும்' என்னும் தலைப்பில் 07.03.2011 முதல் 16.03.2011 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

★

பயிலரங்கம் 16

## முருகியல் நோக்கில் பதினெண் மேற்கணக்கும் கீழ்க்கணக்கும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருவையாறு அரசர் கல்லூரியும் இணைந்து 'முருகியல் நோக்கில் பதினெண் மேற்கணக்கும் கீழ்க்கணக்கும்' என்னும் தலைப்பில் 17.03.2011 முதல் 26.03.2011 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

முனைவர் கி. சிவக்குமார்
முனைவர் நா. ஜானகிராமன்
முனைவர் மு. சிவச்சந்திரன்
முனைவர் இரா. கண்ணன்
முனைவர் சா. சிற்றரசு
முனைவர் அ. ஜான்பீட்டர்
முனைவர் மூ. பரிமணன்
முனைவர் அ. செல்வராசு
முனைவர் கி. மணிமாறன்
முனைவர் இந்திரா மனுவேல்
முனைவர் க. துரையரசன்
முனைவர் ஆர்.கே. அழகேசன்
முனைவர் அ. தௌஃபீக் ரமீஸ்
முனைவர் சி.கலைச்செல்வன்
முனைவர் சி. மனோகரன்
முனைவர் தே.வீ. சுமதி
முனைவர் வீ. கோபால்
முனைவர் இரா.ச. சுகிர்தா பஸ்மத்
முனைவர் கே. பழனிவேலு
பேராசிரியர் இரா. அறவேந்தன்

ஆகிய அறிஞர்கள் இப்பயிலரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

பயிலரங்கம் 17

## செவ்வியல் இலக்கண, இலக்கியக் கோட்பாட்டு உருவாக்கத்திற்கு உரையாசிரியர்களின் பங்களிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'செவ்வியல் இலக்கண, இலக்கியக் கோட்பாட்டு உருவாக்கத்திற்கு உரையாசிரியர்களின் பங்களிப்பு' என்னும் பொருளில் 01.12.2011 முதல் 10.12.2011 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

முனைவர் உல. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் பெ. மாதையன்
பேராசிரியர் இரா. அறவேந்தன்
முனைவர் ஆ. மணி
முனைவர் இரா. சம்பத்
முனைவர் அ. சதீஷ்
முனைவர் பா. ஜெய்கணேஷ்
முனைவர் ந. சண்முகம்
முனைவர் தெ. ஞானசுந்தரம்
முனைவர் ச. குருசாமி
பேராசிரியர் க. முருகையன்
முனைவர் ய. மணிகண்டன்
முனைவர் இரா. குமரவேலன்
பேராசிரியர் அரங்க. இராமலிங்கம்
பேராசிரியர் இரா. செயராமன்
பேராசிரியர் ப. மருதநாயகம்
முனைவர் சுப. நடராசன்
முனைவர் இரா. சீனிவாசன்

ஆகிய அறிஞர்கள் இப்பயிலரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர். மாநிலக்கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பச்சையப்பன் கல்லூரி, இராணி மேரி கல்லூரி ஆகிய நிறுவனங்களைச் சார்ந்த நாற்பது மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

★

பயிலரங்கம் 18

## தொல்காப்பிய எழுத்து, சொல் இலக்கண மரபும் சங்க இலக்கியமும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து 'தொல்காப்பிய எழுத்து, சொல் இலக்கண மரபும் சங்க இலக்கியமும்' என்னும் தலைப்பில் 14.12.2011 முதல் 23.12.2011 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

இந்தப் பயிலரங்கின் தொடக்க விழா 14.12.2011 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் சீ. பக்தவத்சல பாரதி வரவேற்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு 'பண்டைத் தமிழர் சமய மரபுகள்' என்னும் நூலை வெளியிட்டுத் தொடக்கவுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் இரா. கோதண்டராமன் சிறப்புரையாற்றினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளார் முனைவர் த. பரசுராமன் நன்றிகூறத் தொடக்க விழா நிறைவுபெற்றது.

இந்தப் பயிலரங்கில் கீழ்க்காணும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

பேராசிரியர் இரா. அறவேந்தன்
பேராசிரியர் எஸ். ஆரோக்கியநாதன்
பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்
பேராசிரியர் வ. குருநாதன்
பேராசிரியர் இரா. செயராமன்
முனைவர் அ. காமாட்சி
பேராசிரியர் ஆ. கார்த்திகேயன்

பேராசிரியர் இரா. கோதண்டராமன்
பேராசிரியர் பெ. மாதையன்
பேராசிரியர் க. முருகையன்
பேராசிரியர் கி. நாச்சிமுத்து
பேராசிரியர் ந. நடராசப்பிள்ளை
பேராசிரியர் பி. பாண்டியராஜா
பேராசிரியர் சு. இராசாராம்
பேராசிரியர் கி. அரங்கன்
முனைவர் இரா. சம்பத்
பேராசிரியர் தூ. சேதுபாண்டியன்
பேராசிரியர் செ.வை. சண்முகம்
பேராசிரியர் அ. சீனிவாசன்
முனைவர் இரா. சீனிவாசன்
முனைவர் இரா. திருமாவளவன்

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுவைப் பல்கலைக்கழகம், காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், மயிலம் செந்தமிழ்க் கல்லூரி, தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பயிலும் 41 மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

23.12.2011 அன்று மாலை நடந்த நிறைவு விழாவில் முனைவர் சீ. பக்தவத்சல பாரதி வரவேற்புரையாற்றினார். கலை பண்பாட்டுத் துறைச் சிறப்புச் செயலர் இராகேஷ் சந்திரா தலைமை தாங்கினார். புதுச்சேரி மாநில முதலமைச்சர் ந. அரங்கசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கிப் பயிலரங்கில் கலந்துகொண்ட மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்தார்.

ஜவர்கர்லால் நேரு பல்கலைக்கழக இந்திய மொழிகள் மையத் தலைவர் பேராசிரியர் கி. நாச்சிமுத்து நிறைவுரையாற்றினார். முனைவர் க. இரவிசங்கர் நன்றி கூறினார்.

★

பயிலரங்கம் 19

## மணிமேகலைக் காலச் சமயச் சமுதாயச் சூழல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளிச் செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'மணிமேகலை காலச் சமயச் சமுதாயச் சூழல்' என்னும் தலைப்பில் 14.12.2011 முதல் 23.12.2011 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

இப்பயிலரங்கின் தொடக்க விழா 14.12.2011 அன்று காலை 10 மணியளவில் தொடங்கியது. இவ்விழாவில் செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி நிர்வாகக் குழுத் தலைவர் எஸ்.பி. காசிச்செட்டியார் வரவேற்புரையாற்றினார். சென்னைத் துறைமுகம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் பழ. கருப்பையா தொடக்கவுரையாற்றினார். அவ்வுரையில் அவர் மணிமேகலைக் காப்பியச் சிறப்புக்களை எடுத்துரைத்தார். பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். கல்லூரியின் இணைச்செயலர் எம். இராஜேந்திரன், கல்லூரிப் பொருளாளர் எம். சின்ன அழகப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பயிலரங்க ஒருங்கிணைப்பாளரும் கல்லூரி முதல்வருமான முனைவர் பழ. முத்தப்பன் நன்றியுரை வழங்கத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இப்பயிலரங்கில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

பேராசிரியர் அ. ஆலிஸ்
பேராசிரியர் மு. பழனியப்பன்
பேராசிரியர் சா. நீலகண்டன்
முனைவர் சொ. சேதுபதி
பேராசிரியர் ப. மருதநாயகம்
பேராசிரியர் அ. அறிவுநம்பி
முனைவர் இராம. சௌந்தரவல்லி
முனைவர் ந. முருகேசபாண்டியன்
முனைவர் மா. சற்குணம்
முனைவர் இரா. தமிழரசி
முனைவர் பழ. முத்தப்பன்
பேராசிரியர் தெ. முருகசாமி
பேராசிரியர் மா. சிதம்பரம்
பேராசிரியர் சிவ. மாதவன்
பேராசிரியர் இரா. அறவேந்தன்
முனைவர் சு. மாதவன்
முனைவர் ச. சோமசுந்தரம்
பேராசிரியர் சோ. ந. கந்தசாமி
பேராசிரியர் வெ. குப்புசாமி

இந்தப் பயிலரங்கில் செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி, திருச்சி தூய வளனார் கல்லூரி, பிஷப் ஹீபர் கல்லூரி, உருமு தனலெட்சுமி கல்லூரி, மண்ணச்சநல்லூர் சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி, காந்தி கிராமப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து 40 மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

23.12.2011 அன்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் வெ. குப்புசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். பேராசிரியர் சோ.ந. கந்தசாமி தலைமையுரையாற்றினார். எழுத்தாளர் பிரேமா நந்தகுமார் பயிலரங்கில் கலந்துகொண்ட மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுரையாற்றினார். பின்னர்ச் செட்டிநாடு கல்வி அறக்கட்டளைச் செயலாளர் எஸ். சுப்பையா செட்டியார், இணைச்செயலாளர் ஆர். திருநாவுக்கரசு, பொருளாளர் எல்.என். இலெட்சுமணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பயிலரங்கத்தின் நிறைவாக ஒருங்கிணைப்பாளர் பழ. முத்தப்பன் நன்றிகூற விழா இனிதே நிறைவுற்றது.






★

# பத்துப்பாட்டின் கவிதையியல்

கார்த்திகேசு சிவத்தம்பி



## I

சங்கப் பாடல் தொகுதியினுள் 'மாறுபாடற்ற ஓர் ஒருமைத் தன்மை'யைக் காண்பதிலும் அதனை வற்புறுத்துவதிலும் தொல்காப்பியம் முதலாம் இலக்கண நூல்களும் பிற்காலத்தில் வந்த பல்வேறு இலக்கிய வரலாற்று நூல்களும் அக்கறை செலுத்தியுள்ளனவெனினும், சங்கப் பாடல் தொகுதியை உன்னிப்பான ஆய்வுக்கு உட்படுத்துகின்ற பொழுது, அப்பாடல் தொகுதியினூடே மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்படத்தக்க செல்நெறிகள் (போக்குகள்) காணப்படுகின்றமையும் அச்செல்நெறிகள், இலக்கணமயப்படுத்தித் தரப்பட்டுள்ள பண்புகளிலிருந்து மேலே செல்லுகின்றனவாகவும் காணப்படுகின்றமை பற்றிய கவிதையியற் சிக்கலும் ஏற்கெனவே எடுத்துக் கூறப்பட்டுள்ளன (சிவத்தம்பி.1995). அத்தகைய ஒரு மாற்றுச் செல்நெறி பத்துப்பாட்டுத் தொகுதியின் மூலம் எவ்வாறு புலப்படுகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## II

(பாரம்பரிய வரன்முறையில்)

பாட்டு - பாடியவர் - பாட்டுடைத் தலைவர் - அடி - அளவு

**1.**திருமுருகாற்றுப்படை - மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் - முருகன் - 317

**2.**பொருநராற்றுப்படை - முடத்தாமக் கண்ணியார் - கரிகாலன் - 248

**3.**சிறுபாணாற்றுப்படை - நல்லூர் நத்தத்தனார் - ஒய்மான் நாட்டு நல்லியக்கோடன் - 269

**4.**பெரும்பாணாற்றுப்படை - கடியலூர் உருத்திரங்கண்ணனார் - தொண்டைமான் இளந்திரையன் - 550

**5.**முல்லைப்பாட்டு - காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் - பாண்டியன் நெடுஞ்செழியன் - 100

**6.**மதுரைக்காஞ்சி - மாங்குடி மருதனார் மகனார் நத்தத்தனார் - தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் - 782

**7.**நெடுநல்வாடை - மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் - பாண்டியன் நெடுஞ்செழியன் - 188

**8.**குறிஞ்சிப்பாட்டு - கபிலர் - 261

**9.**பட்டினப்பாலை - கடியலூர் உருத்திரங்கண்ணனார் - கரிகாலன் - 301

**10.**மலைபடுகடாம் - பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் நன்னன் - சேய் நன்னன் - 583

இப்பத்துப் பாடல்களுள் திருமுருகாற்றுப்படை காலத்தாற் பிந்தியது என்பது ஒப்புக்கொள்ளப்படும் ஒரு நிலைப்பாடாகும் (சிவத்தம்பி 1981). பத்துப்பாட்டில் முருகு தவிர்ந்த ஒன்பது பாடல்களும் எட்டுத்தொகையிற் கலித்தொகை, பரிபாடல் தவிர்ந்த ஆறு பாடல்களும் சமகாலத்துக்குரியனவாகக் கொள்ளப்படுதல் இலக்கிய வரலாற்று மரபாகும். சங்கப் பாடல்கள் என இன்று கொள்ளப்படுபவை இப்பாடல்களே (9+6).

ஆயினும், சங்க இலக்கியம் பற்றிய இந்தப் பாரம்பரியத் தொன்மத்தை எடுத்துரைக்கும் இறையனார் களவியல் உரை, சங்க இலக்கிய ஆக்கங்களின் பெயர்களைத் தரும்பொழுது, பத்துப்பாட்டு பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இது காரணமாகப் பத்துப்பாட்டை நியமமான சங்க மரபுடன் இணைத்து நோக்குவது பற்றி ஓர் ஐயப் பாட்டினை ஜோன் மார் கிளப்பியுள்ளார் (மார்-1958).

ஆனால் வரலாற்றாசிரியர்கள் முருகு தவிர்ந்த ஒன்பதையும் கலி, பரிபாட்டுத் தவிர்த்த ஆறையும் சமகாலத்தனவாகக் கொண்டே தமிழ்நாட்டின் புராதன வரலாற்றைத் தந்துள்ளனர். (நீலகண்ட சாஸ்திரியார்- 1964).

பத்துப்பாட்டின் ஒன்பது பாடல்களிலும் வரும் மன்னர்கள் புலவர்களிற் பலர் எட்டுத்தொகைப் பாடல்களிலும் காணப்படுபவர்களே. எனவே வரலாற்று அடிப்படையில் இவை சமகாலத்தின் சமாந்தரமான படைப்புக்களே என்பதில் ஐயுறவு எதுவும் இருக்க முடியாது. பத்துப்பாட்டுத் தொகுதியின் பிரதான அம்சம் (ஒப்பு நோக்கில்) நீண்ட பாடல்கள் ஆகும்.

எட்டுத்தொகை நூல்களுள் அகத்திணைப் பாடல்கள் அடி அளவு கொண்டு தொகுக்கப்பெற்றிருப்பதை அறிவோம். எட்டுத் தொகையின் புறத்திணைப் பாடல்களும் அதிகம் நீண்டவையல்ல. இந்த அடிப்படையில் நோக்கும்பொழுது 103 முதல் 785 வரை அடிகளைக் கொண்ட பாடல்கள் நீண்டவையே. தொல்காப்பியம் அகவலுக்குத் தரும் வரம்பு 3 வரிகள் முதல் 1000 வரிகளாகும் (செய்யுளியல்). மேலும், தொடர்ச்சியான சமகாலக் கதைப்பாடல்கள் எதுவும் இல்லாததாலும், இந்த நீண்ட பாடல்கள் முக்கியமாகின்றன. அதாவது கவிதையியல் மட்டத்தில் இந்தப் பாடல் நீட்சிக்கு ஏதாவது காரணம் இருக்க முடியுமா என்பது கவன ஈர்ப்புக்கான முக்கியமான வினாவாகும்.

### III

பத்துப்பாட்டினுள் இடம்பெறும் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய பாடல்களில் அகத்திணை, புறத்திணை இயைக்கப்பட்டுள்ள முறைமையில் நியமமான திணை, துறை மரபில் இல்லாத ஒரு நெகிழ்ச்சியை அவதானிக்கலாம்.

முதலாவதாகத் திணை மரபைப் பிரக்ஞைபூர்வமாகப் புறம் காணும் முயற்சியாகும். பட்டினப்பாலையில் இப்பண்பு காணப்படுகிறது. முற்றிலும் புறத்திணைக்குரிய ஒரு பாடாண் பாடல், கற்பனை சேர்த்த ஓர் உத்தி முறைமையால் வேண்டுமென்றே அகத்திணை ஆக்கப்படுகின்றது.

> **"முட்டாச் சிறப்பின், பட்டினம் பெறினும்**
> **வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய**
> **வாரேன் வாழிய நெஞ்சே"** (247-249)

என்பதும்

> **"வேலினும் வெய்ய கானம் அவன்**
> **கோலினும் தண்ணிய தடமென் தோளே"** (299-309)

என்று முடிப்பதும் அகத்திணையை முற்றிலும் ஒரு கற்பனை உத்தியாகக் கொள்ளும் தன்மையையே காட்டுகின்றது.

இங்கு அகப்பாடலின் முதல், கரு, உரி மரபு அதாவது அகப்பாடலின் தன்னியல்பான உணர்வெழுச்சி (spontaneity) செயற்கையாக்கப்படுவதை அவதானிக்கலாம். இத்தகைய ஒரு பண்பு எட்டுத்தொகையில் வரும் அகப்பாடல்களிலும் காணப்படுவதுதான். அலரின் பெருக்கத்தைக் குறிப்பதற்குப் புறத்திணைப் போர்களை உவமையாகக் காட்டும் ஒரு பண்பு அகநானூற்றிலே காணப்படுகின்றது. அகநானூற்றிலும் அகத்துறையினூடே குறிப்பிடப்பெறும் புறக்குறிப்புக்கள் 288 என்று கூறுவர் (கைலாசபதி - 1968). ஆனால் இங்கே திணைமரபே ஓர் உத்தியாக்கப்படுகிறது.

இது சங்கக் கவிதையில் ஏற்படும் ஒரு திட்டவட்டமான அகற்சியேயாகும். நெடுநல்வாடை, முல்லைப்பாட்டில் வரும் திணைப்பிறழ்வு கவித்துவ நுண்மையுடையதாகக் காணப்படுகின்றது.

முல்லைப்பாட்டின் அமைப்பு திணைமரபுக்குள் நின்றுகொண்டு அகத்தையும் புறத்தையும் எதிர்நிலைப்படவைக்கும் ஒரு முயற்சியேயாகும் (contrastive). தலைவி நிலையையும் பாசறை நிலையையும் சித்திரித்துவிட்டு இறுதியில்,

> **"காடு பிறக்கு ஒழிய**
> **துணைபரி துரக்கும் செலவினர்**

வினைவிளங்கு நெடுந்தேர் பூண்டமா" (101-103) வின் தேரில் தலைவன் வீடு வருகிறான். அந்த அளவில், இலக்கணப்படி ஒருதுறைநிலை பூர்த்தியாகிறதுதான். ஆயினும் நியாயமான பாடல் மரபில் இப்புலவனின் கற்பனை ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது என்பது தெரிகின்றது. ஆனால் நெடுநல்வாடையிலோ திணைப்பிறழ்வு மிகுந்த கவிதைச் சுவையுடன் கையாளப்படுகின்றது.

அதிலே அகத்திணை நிலையும், புறத்திணை நிலையும் எதிர் முரண்களாகச் சித்திரிக்கப்படுகின்றன. முதலில் அரண்மனையும் அரசியின் இருக்கையும், அரசி தேற்றுவிக்கப்படுவதும் ஒரு காட்சியாக அமைய, அதற்குரிய எதிர்க்காட்சியாக (contrast shot) பாசறையில் அரசனின் நிலை எடுத்துக் கூறப்படுகிறது. அவ்வாறு கூறுவதுடன் பாடல் நிறைவுறுகிறது.

> **சிலரோடு திரிதரும் வேந்தன்**
> **பலரோடு முரணிய பாசறைத் தொழிலே** (187-188)

இந்த இரண்டு காட்சிகளையும் இணைப்பதற்கு (இணைத்து ஒரு துறையாக்குவதற்கு) பாடலினுள் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. அந்த முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்பது கவிதைத் தலைப்பிலேயே தெரிகின்றது. நெடு 'நல்' வாடை - மனைவிக்கு நீண்டதும் மன்னனுக்கும் நல்லதுமான வாடை.

அரண்மனையின் வளச் செழுமையும் கட்டிலின் அழகுச் செம்மையும் பாசறையின் கொடூரமான வாழ்க்கையுடன் எதிரெதிராக நின்று கவிதைக்கு ஒரு கட்புலப் பரிமாணத்தைத் தருகின்றன. போரின் கொடூரம் நன்கு புலனாகின்றது. சங்கப் பாடல் மரபு இங்கு நெகிழ்வுடன் அகட்டப்படுகிறது.

இவ்வாறு சொல்லும் பொழுது இப்பாடல்களினூடே கிளம்பும் கவிதைப் புலக்காட்சி (poetic perspective), அகம்-புறம் தரும் தனிநிலைப்பட்ட புலக்காட்சிகளிலிருந்து அகண்டதாகவேயுள்ளது. அகமும் புறமும் அருகருகே நின்று வாழ்க்கை பற்றிய அகண்ட பார்வையைத் தருகின்றன. இதனைச் சற்று விரித்துக் கூறுவது அவசியமாகும்.

அக- புறப் பாடல்களுக்குத் தரப்பட்டிருக்கும் இலக்கண அமைப்பை நோக்கும்பொழுது, அவை தமது புலப்படுத்துகையில் (expressiveness) வாழ்க்கையின் ஒரு அம்சத்தையே எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் வாழ்க்கை என்பது அகமும் புறமும் இணைந்ததுதான். அந்த இணைவில்தான் வாழ்க்கை பற்றிய ஒரு முழுப்பார்வை கிடைக்கின்றது.

சங்கப் பாடல்களின் தொகுதிகளை நோக்கும்பொழுது, இவ்வாறான ஓர் இணைவு நோக்கு, முல்லைப்பாட்டிலும் நெடுநல்வாடையிலும் மேற்கிளம்புவதைக் காணலாம். அதாவது தொகை நிலைப் பாடல் மரபில் ஒரு நிச்சயமான நெகிழ்வு ஏற்படுகிறது.

சங்க இலக்கியங்களினுள்ளே கதைப்பாடல்கள் இல்லாத இன்றைய நிலையில் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடையில் குறிப்பாக நெடுநல்வாடையில் ஏற்படும் இந் நெகிழ்வு சங்கத் தமிழ்க் கவிதையியலிற் காணப்படும் வளர்ச்சியாகவே கொள்ளப்படல்வேண்டும். இந்த வளர்ச்சி நிலையிலிருந்து சிலப்பதிகாரத்துக்கான வளர்ச்சி அதிக தொலைவில் இல்லை என்றே கூறல் வேண்டும். **இந்த வளர்ச்சி வெறுமனே பாடல் அடிகளின் பெருக்கத்தினால் ஏற்படுவதன்று. இது கவிதையியலில் ஏற்படும் வளர்ச்சியாகும்.**

### IV

ஆற்றுப்படை தனியொரு இலக்கியவகை (genre)யாக மேற்கிளம்பியுள்ளமை பத்துப்பாட்டின் கவிதையியல் முக்கியத்துவத்தை முனைப்புறுத்துகின்றது எனலாம்.

பத்துப்பாட்டில் ஐந்து பாடல்கள் ஆற்றுப்படைகளாகும். திருமுருகாற்றுப்படை காலத்தாற் பிந்தியது என்று கொள்ளினும் நான்கு ஆற்றுப்படைகள் சங்க காலத்துக்குரியன என்பது முக்கியமான உண்மையாகும். பத்துப்பாட்டில் உள்ள ஒரு ஆற்றுப்படையையும் (பெரும்பாணாற்றுப்படை), பட்டினப்பாலையையும் இயற்றியவர் ஒரு புலவரே என்பர் (உருத்திரங்கண்ணனார்). சங்க காலத்தின் இறுதிக் கட்டத்தைச்

சேர்ந்தது சிறுபாணாற்றுப்படை என்பது வரலாற்றாசிரியன் கருத்தாகும் (நீலகண்ட சாஸ்திரியார், 1964).

தொல்காப்பியம் புறத்திணையியலுள் இது பாடாண் வகையினுள் ஒன்று என்று கூறப்படுகின்றது.

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி**
**பெற்ற பெருவளம் பெறார்அர்க்கு அறிவுறீஇ**
**சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்**

(புறத்- 4)

பாடாணில் ஒன்று எனக் குறிப்பிடப் பெற்றாலும் இதற்கென ஒரு தனியான பாடல் மரபு இருந்ததென்பது சொல்லதிகார எச்சவியலால் அறியக் கிடக்கின்றது.

**முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி**
**பன்மையொடு முடியினும் வரைநிலை இன்றே**
**ஆற்றுப்படை மருங்கின் போற்றல் வேண்டும்**

(சொல். எச்சவியல் 66)

விறலியாற்றுப்படைத் துறையாக்கம் கொண்ட பாடல்கள் புறநானூற்றிலே உள்ளன (64, 103, 105, 123). ஆனால் பத்துப்பாடலினுள்ளே ஆற்றுப்படை தனியொரு இலக்கிய வகையாக(genre) ஆகிவிட்டது. இது சங்க காலத்தினூடே ஏற்பட்ட ஒரு சமாந்தரமான (parallel)வளர்ச்சியாகும். இவ்வாற்றுப்படைப் பாடல்களின் எழுச்சி சங்கக் கவிதையியலில் ஏற்படுத்தும் மாற்றங்களை அவதானித்துக் கொள்ளல் அவசியம்.

நியமமான சங்கப் பாடல்களில் வர்ணனை (இயற்கை சித்திரிக்கப்படுவது) அகம் எனில் முதல், கரு, உரியாலும் அதாவது கருவானது (இயற்கை வர்ணனை) உரிக்கு உள்ளதாகவே வரும். புறம் எனில் திணை, துறைக்கு உரியதாகவுமே வரும். ஆற்றுப்படைப் பாடல்கள் இலக்கண நிலையிற் புறத்துக்குரியனவே (பாடாண்). ஆற்றுப்படையில் வரும் இயற்கை வருணனை 'வழியை', 'வழிக்காகவே' சித்திரிக்கும் ஒரு நிலைமையை ஏற்படுத்துகின்றது. உண்மையில் ஆற்றுப்படை புலவரைப் புகழ்வதற்கான ஒரு உத்தியே.

மலைபடுகடாம், பெரும்பாணாற்றுப்படை ஆகியனவற்றைப் பார்க்கும்பொழுது வர்ணனை தன்னுள்தான் முக்கியப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. இந்த விரிவான வர்ணனை முறை, திணை, துறை முறைமையயின் செறிவை உடைத்து ஒரு நீட்சியை ஏற்படுத்துகின்றது எனலாம். இத்தகைய நீட்சி புரவலரைப் பரவுதலிலும் புகழ்தலிலும் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்துகின்றது.

பொருநராற்றுப்படையில் வழியின் வருணனையிலும் பார்க்கக் கரிகால்வளவனது சிறப்பே மேலோங்கி நிற்கின்றது. சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனின் சிறப்பு, அற்றுப்போன தலைநகரங்களின் பின்புலத்தில் வைத்துப் பேசப்படுகின்றது. பெரும்பாணாற்றுப்படையில் வழியின் வர்ணனையே மேலோங்கி நிற்கின்றது. மலைபடுகடாத்திலும் அவ்வர்ணனை மேலோங்கி நிற்கின்றது.

இவ்விடத்தில் வர்ணனை என்னும் கவிதை உத்தி பற்றிக் குறிப்பிடல் அவசியம். 'வர்ண' (நிறம்) என்னும் சொல்லின் அடியாக வருவதாகவே இதனைக் கொள்ளல் வேண்டும். அதாவது உள்ள 'ஒன்றுக்கு நிறம் ஏற்றிச் சொல்லல்' (telling it in colourful terms) என்பதே இதன் பொருளாகும். இங்கு வர்ணனை என்பது தன்னுள் தான் முடிந்த முடிபாக ஆகிவிடுகின்ற ஒரு நிலையாகும்.

வர்ணனையின் வளர்ச்சி தமிழிலக்கியத்தின் பிற்கால இலக்கியத்திலும் முக்கிய இடம்பெறுகின்ற ஒன்றாகும். பெருங்காப்பிய மரபில் நாட்டு வருணனை, நகர் வருணனை என்பன முக்கியமாகின்றன. அந்த நிலையில் வருணனை என்பது அதிகாரப்பட்டு நிற்கும் இலக்கியப் பொருளோடு இயைபுறாததாகத் தன்னுள் தான் முக்கியப்பட்டு நிற்கும் ஒரு நிலையைச் சுட்டுகின்றது. இதன் பின்னர் உரைவழி இலக்கியத்திலும் முக்கியமடையத் தொடங்கி நாவல்களில் இது ஒரு முக்கிய இடத்தைப் பிடிப்பதை அவதானிக்கலாம். கல்கியின் வரலாற்று நாவல்களில் வர்ணனைக்கு ஒரு முக்கிய இடம் உண்டு.

தமிழில் இந்த வர்ணனைப் போக்கின் நதிமூலமாக ஆற்றுப்படை மரபினைக் கொள்ளவேண்டும் போலத் தோன்றுகின்றது. வர்ணனை மரபு சங்க இலக்கியத்தின் பொருட்செறிவு நிலையிலிருந்து ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது என்பது கண்கூடு. ஆற்றுப்படையின் எழுச்சி சங்க இலக்கிய மரபினுள் ஒரு மாற்றத்துக்குக் காலாகின்றது.

## V

பத்துப்பாட்டினுள் வரும் 'குறிஞ்சிப்பாட்டு' சங்க காலத்திலேயே, அதுவும் கபிலர் போன்ற ஒரு தலைநிலைப் புலவரால் சங்க இலக்கியப் பண்பாடு விடய நோக்காகப் (objective) பார்க்கப்படும் ஒரு நிலைமையைக் காட்டுகின்றது எனலாம்.

குறிஞ்சிப்பாட்டின் கொளு அகத்திணை, சங்ககாலத்திலேயே தமிழின் சிறப்புக் கவிதைத் துறையாகக் (சமஸ்கிருதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது) கொள்ளப்பட்டுவிட்டது என்பதை எடுத்துரைக்கின்றது. 'ஆரிய அரசன் பிருகதத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்கு' எனும் தொடர் முக்கியமாகின்றது.

இறையனார் களவியல் உரையிலும் நூலின் பொருள் பற்றிக் கூறும்பொழுது, 'இது என்னுதலிற்றோவெனின் தமிழ் நுதலிற்று' என்று கூறப்படுவதனோடு இதனை ஒப்பு நோக்க வேண்டும். சங்க இலக்கியக் கவிதையியலிற் குறிஞ்சிப்பாட்டு ஏற்படுத்தும் நிலைமைகள் முக்கியமானவையாகின்றன.

தொல்காப்பியம், அகத்திணையியலை நோக்கும்பொழுது அதிலே சொல்லப்பட்ட கூற்றுக்கள், துறைகள் என்பன அவ்வத்திணையின் பின்புலத்திலிருந்தே எழுகின்றன என்பது வெள்ளிடைமலையாகத் தெரிகின்றது. அதாவது, ஒவ்வொரு திணைக்குமுரிய பாடல்கள் அவ்வத்திணையுள்ளிருந்தே கிளம்புவனவாய், அவ்வத்திணைகளையே தமது நோக்குத் தளமாய்க் கொண்டுள்ளன என்பது தெரியவரும். அப்படிக் கொண்டிருக்கின்றபொழுதுதான் உள்ளுறை, இறைச்சி ஆகியன சாத்தியமாகும். திணையின் நோக்குநிலைக்குப் புறமாக நின்றால் இக்கவிதை உத்திகள் சாத்தியமாகா. ஆனால், குறிஞ்சிப்பாட்டிலோ சங்க இலக்கியத்தின் பெரும்புலவருள் ஒருவரான கபிலர் தான் எடுத்துக்கொண்ட பாடுபொருளை வேறொரு தளத்தில் நின்று பாடும் தன்மையினை நன்கு உணரலாம். இவ்வுண்மையினைக் கபிலர் குறிஞ்சிப்பாட்டிற் கையாளும் உவமையொன்றும் குறிஞ்சிப்பாட்டில் வரும் குறிப்பு ஒன்றும் நுண்ணிதாக உணர்த்துகின்றன எனலாம்.

குறிஞ்சிப்பாட்டில் தலைவிக்கும் செவிலிக்கு மிடையே நிற்கும் தோழி தனது நிலையை விவரிப்பதற்குக் கையாளும் உவமை சுவாரசியமானது.

**இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்**
**வினையிடை நின்ற சான்றோர் போல**
**இருபேர் அச்சமொடு யானும் ஆற்றலேன்**

இந்தத் தோழி பிற்காலக் கோவை மரபில் வரும் சாதுரியக்காரியாகத் தோன்றுகின்றாளே அல்லாது, சங்கப் பாடல்களில் வரும் தலைவி பற்றிய ஆதங்கம் மிக்க 'உடனுறை ஒருவளாகக்' காணப்படவில்லை. குறிஞ்சிப்பாட்டின் தன்மை இங்குக் குறிஞ்சியினுள்ளே வேர்விட்டு நிற்கவில்லை.

இதைப் போன்றதே பாடலின் பிற்பகுதியில் வருகிற மாலைக் காலத்தின் வர்ணனை.

**மான்கணம் மரமுதல் தெவிட்ட ஆன்கணம்**
**கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர**
**ஏங்குவயிர் இசைய கொடுவாய் அன்றில்**
**ஓங்குஇரும் பெண்ணை அகமடல் அகவ**
**பாம்புமணி உமிழ, பல்வயின் கோவலர்**
**ஆம்பலம் தீம்குழல் தெள்விளி பயிற்ற**
**ஆம்பல் ஆயஇதழ் கூம்புவிட வளமனைப்**
**பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி**
**அந்தி அந்தணர் அயர, கானவர்**
**விண்தோய் பணவை நின்று ஞெகிழி பொத்த**
**வானம்மா மலைவாய சூழ்பு கறுப்ப கானம்**
**கல்லென்று இரட்ட, புள்ளினம் ஒலிப்ப**
**சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்பத்**
**துனைஇய மாலை துன்னுதல் காணூஉ**

(217-230)

இந்த வருணனை முல்லைநிலப் பின்புலத்தில் நின்றே எடுத்துரைக்கப்படுவதாகவே (narrate) உள்ளது. குறிஞ்சிப்பாட்டின் இந்தக் கவிதையியல் நிலைப்பாடு சங்கப்பாடல்களின் பொதுவான நோக்குமுறையிலிருந்து (point of view) மாறுபட்டதாக - உண்மையில் அதிலிருந்து விடுபடுவதாக அமைவதை அவதானிக்கலாம்.

அகநானூற்றில் வரும் அரசர்கள் பற்றிய உவமைகள் துறையின் பொதுவான முனைப்புக்குள்ளேயே நிற்பன என்பது உண்மையே. அகநானூற்றின் அத்தகைய பாடல்களிற் சிறிதளவும் குறிஞ்சிப்பாடலிற் பிரத்தியட்சமாகவும் தெரிவது யாதெனில் நம்மிடத்துள்ள சங்கப் பாடல்கள் பலவற்றில் தொல்காப்பிய அகத்திணையியல் (இலக்கண நிலை நின்று) கூறும் இயல்பாக எழுதல் (spontaneity) என்னும் பண்பை இழந்துகொண்டு வருவதாகும்.

முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை பற்றிய குறிப்புக்களில் எடுத்துக்கூறியதுபோன்று ஓர் அகலமான பார்வைக்கு இது வழிவகுக்கின்றது. எனினும் ஒருவிதச் செயற்கைப்பாடும் இதனூடே காணப்படலாம் என்பதற்குக் குறிஞ்சிப்பாட்டு ஓர் உதாரணம் என்பதை ஒத்துக்கொள்ளவே வேண்டும்.

இத்தகைய நிலையில் சங்க இலக்கியம் வாழ்க்கை வட்டத்திற்கு வெளியே வழுவிச் செல்லும் நிலைமையை நாம் அவதானிக்கலாம். குறிஞ்சிப்பாட்டு சங்க இலக்கியத்தின் இலக்கணக் கட்டுக்கோப்பையே ஒரு மரபாக்குகிறது. **இலக்கணம் இலக்கியமாக்கப்படுகின்றது.**

## VI

பத்துப்பாட்டினுள் வரும் பாடல்களை இத்தகைய இலக்கிய விமரிசனத்துக்குள்ளாக்கும் நிலையில் மதுரைக்காஞ்சி வழியாக மேற்கிளம்பும் ஒரு விமரிசன உண்மை மிகமிக முக்கியமாகின்றது. மதுரைக்காஞ்சி, அதன் தலைப்பு ஐயமற எடுத்துக் கூறுவதற்கு இயைய 'காஞ்சி' பற்றியதே. நச்சினார்க்கினியர் தமது உரையில், 'வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமை சான்றோரையும் குறிப்பினது காஞ்சித்திணை என்பது பொருளாயிற்று' என்று பின்னர் விளக்கி, முதலில் 'மதுரையிடத்து அரசற்குக் கூறிய காஞ்சி' என்று விளக்குகின்றார்.

காஞ்சி பற்றிய தொல்காப்பியப் புறத்திணையியல் வரைவிலக்கணத்துக்கும் (நில்லா வுலகம் புல்லிய நெறித்தே), அதற்குரியனவாகத் தரப்படும் துறைகட்கும் உள்ள இயைபின்மையைச் சுட்டிக்காட்டிய மார், இதில் பிராமணீயக் கோட்பாடுகளின் படிப்படியான மேலாண்மை தெரியவருகின்றதென்று கூறியுள்ளார் (மார், 1958).

**மதுரைக்காஞ்சியின் அமைப்பு முக்கியமானது**
**கொன்ஒன்று கிளக்குவன் அடுபோர் அண்ணல்**
**கேட்டிசின் வாழி! கெடுகநின் அவலம்**
**கெடாது நிலைஇயர், நின்சேண் விளங்கு நல்லிசை**

(207-209)

என்று விளித்து, 'அரியதந்து குடிஅகற்றி, பெரியகற்று இசைவிளக்கி' வாழுமாறு கூறப்படுகிறது.

இப்பாடலைக் கட்டவிழ்ப்புச் (deconstruct) செய்யும்பொழுது ஒரு சுவாரசியமான உண்மை வெளிவருகின்றது. 'கெடுக நின் அவலம்' என்று கூறப்பட்டாலும் அவன் உணரும் அவலம் யாது என்பது தெரியவில்லை (கெடுக நின் அவலம் ஒரு வாய்ப்பாடு என்பது பெரும்பாணாற்றுப்படையாற் புலனாகின்றது). 'அரிய தந்து, குடி அகற்றி' என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தாலும் 'பெரிய கற்று' என்பது யாது என்பது புரியவில்லை. இது 'அறம்' பற்றிய குறிப்பே.

மதுரைக்காஞ்சியின் சுவாரசியம் என்னவெனில், எந்தப் பண்புகளை அது நிலையற்றவை என நிராகரிக்கின்றதோ, அவற்றுடனேயே (அவற்றுக்குள்ளேயே) அவன் வாழவேண்டும் என்பதும் புலனாகின்றது.

**'அரியதந்து குடியகற்றி**
**பெரியகற்று இசைவிளக்கி**
**முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்**
**பலமீன் நடுவண் திங்கள் போலவும்**
**பூத்த சுற்றமொடு பொலிந்துஇனிது விளங்கி**
**பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்**
**பெரும்பெயர் மாறன் தலைவ னாக**
**கடந்துஅடு வாய்வாள் இளம்பல் கோசர்**
**இயல்நெறி மரபின் நின்வாய்மொழி கேட்ப**
**பொலம்பூண் ஐவர் உட்படப் புகழ்ந்த**
**மறம்மிகு சிறப்பின் குறுநில மன்னர்**
**அவரும் பிறரும் துவன்றி**
**பொற்புவிளங்கு புகழ்அவை நிற்புகழ்ந்து ஏத்த**
**இலங்குஇழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய**
**மணம்கமழ் தேறல் மடுப்ப, நாளும்**
**மகிழ்ந்து இனிது உறைமதி, பெரும**
**வரைத்து நீபெற்ற நல்ஊழி யையே'** (766 -782)

முதலில் அவ்வாறு வேண்டப்பெற்றவன் இறுதியில் இன்பத் திளைப்பினனாக இருந்து ‘பெற்ற நல் ஊழியை’ க் கழிக்குமாறு வேண்டப்படுகிறான். இந்த ஒரு கருத்துநிலை இடர்ப்பாடு (ideological difficulty)இப்பாடலிற் காணப்பெற்றாலும் புறத்திணையிற் புகழப் பெறும் ‘அடுபோர் நியமத்தை’க் கைவிடுமாறு இப்பாடல் கோருகின்றது. அந்த அளவில் இந்தப் பாடல் புறத்திணை மரபில் எடுத்துக் கூறப்பட்டனவற்றைக் கருத்து நிலையில் எதிர்ப்பதாகக் (ideological opposed to Cankam norms) காணப்படுகிறது. அந்த வகையில் மதுரைக்காஞ்சி ஒரு புதிய கருத்துநிலைத் தளத்தைக் கோரி நிற்பதைக் காணலாம்.

இது சங்கக் கவிதையியலின் அழகியலையே (aesthetic of Cankam Poetics) கேள்விக்குள்ளாக்கி ஒரு புதிய அழகியலுக்கு எம்மை இட்டுச் செல்வதைக் காணலாம். பழையனவற்றை ஒதுக்கவேண்டுமென்ற இந்தக் குரலை இங்கு நாம் சற்று வன்மையாகவே கேட்கிறோம். பாடாணில் ஒரு புதிய பரிமாணம் நிறுவப்படுகிறது.

இப்புகழ்ச்சி வஞ்சி பெரும்பான்மையும் நிற்கும் யாப்பு முறையிலேயே கூறப்படுவது நோக்கத்தக்கது (சிவத்தம்பி, 1997). சங்க இலக்கியத்தின் கவிதையியலில் மேலும் ஒரு நெகிழ்ச்சியை இங்கு நாம் அவதானிக்கலாம்.

## VII

கவிதையியலில் ஏற்படும் இந்த நெகிழ்ச்சி எத்தகைய யாப்புச் சூழமைவினுள்ளே நடந்தேறுகின்றது என்பதை அறிந்துகொள்வது அவசியமாகும். பத்துப்பாட்டின் யாப்பமைதியைப் பின்வருமாறு விளக்குவார் (கந்தசாமி, 1989):

**நேரிசை ஆசிரியம்** சிறுபாண், பெரும்பாண், முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம்

**வஞ்சிமயங்கிய ஆசிரியம்** பொருநராற்றுப்படை

**வஞ்சி மேலோங்கியவை** பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி.

ஆசிரியம், வஞ்சி என்ற கட்டுக்கோப்புக்குள்ளேயே இப்பாடல்கள் பெரும்பாலும் அமைகின்றன.

கவிதையியலில் முக்கிய நெகிழ்வைக் காட்டுகின்ற முல்லைப் பாட்டு, நெடுநல்வாடை நேரிசை ஆசிரியத்திலேயே (மரபுரீதியான யாப்பிலேயே) வருகின்றன என்பது முக்கியமாகும். அதே வேளையில் நுண்ணிய புகழ்ச்சிக்கான வஞ்சியிலேயே பட்டினப்பாலையும் மதுரைக்காஞ்சியும் அமைந்துள்ளன என்பது முக்கியமாகும்.

பத்துப்பாட்டுப் பாடல்களின் நீட்சி, நாளவை, வேந்தவைகளிற் புலவர்களால் பாடல்கள் எடுத்தோதப்படுகின்ற முறைமையிலும் (art of declamation) வித்தியாசத்தைக் காட்டுகின்றன எனலாம். ஒரே புலவர் இரண்டு வெவ்வேறு நடைகளிற் (styles) பாடுகின்றார் என்பதும் முக்கியமான ஓர் உண்மையாகும்.

உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில் நியம முறைமைகட்கேற்பவும் அதேவேலையிற் பட்டினப் பாலையில் நியமப் பிறழ்வை ஏற்படுத்தும் வகையிலும் பாடும்பொழுது இந்த இரண்டு செல்நெறிகளும் ஒரே காலத்திலேயே காணப்பட்டன என்பது புலனாகின்றது. இது ஒரு முக்கிய உண்மையாகும்.

பத்துப்பாட்டின் கால அடைவை நோக்கும்பொழுதும் இந்த நெகிழ்வுப் போக்கு சங்க காலத்தின் (இலக்கணமயப்படுத்தப்பட்ட) கவிதை மரபுக்குச் சமாந்தரமாகவே நடைபெற்று வந்துள்ளது என்று கொள்ள வேண்டியுள்ளது. வையாபுரிப்பிள்ளை (1998) பின்வரும் கால அடைவைத் தருவார்: .

I

1. பொருநராற்றுப்படை, 2. பெரும்பாணாற்றுப்படை, 3. பட்டினப்பாலை, 4. குறிஞ்சிப்பாட்டு

II. 5. மலைபடுகடாம், 6. மதுரைக்காஞ்சி, 7. நெடுநல்வாடை,

III. 8. முல்லைப்பாட்டு, 9. சிறுபாணாற்றுப்படை

IV. 10. திருமுருகாற்றுப்படை

அதவது கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஏறத்தாழ 250 வரையுள்ள காலப்பகுதி சங்க இலக்கியப் போக்கில் மாற்றம் நிகழும் காலமாகவே (age of transition)காணப்படுகிறது என்னும் உண்மை தெளிவாகின்றது.

பத்துப்பாட்டு இந்த மாறும் தன்மையை நன்கு வலியுறுத்துகின்றது. மாறுபட்டு ஓட்டத்தைச் சுட்டுவதன் காரணமாகவே இறையனார் களவியலுரை பத்துப்பாட்டு நூல்களைக் குறிப்பிடாமலிருந்திருக்கலாம். பத்துப்பாட்டுத் தொகைமரபில் ஒரு பெரும் விரிவு ஏற்படுவதை இப்பாடல் சுட்டுகின்றது.

### துணைநூல்கள்


தொல்காப்பியம் (மர்ரே பதிப்பு), என்.சி.பி.எச், சென்னை, 1981.

பத்துப்பாட்டு - நச்சினார்க்கினியர் உரை (உ.வே.சா. பதிப்பு), 1931.

பத்துப்பாட்டு, மர்ரே பதிப்பு, என்.சி.பி.எச், சென்னை, 1981.

கந்தசாமி, சோ.ந., தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதலாம் பாகம், 1989.

சிவத்தம்பி,கா., தொல்காப்பியக் கவிதையியல் (கட்டுரை), 1997.

சிவத்தம்பி, கா., உலகத் தமிழாராய்ச்சி மாநாடு - கட்டுரை, 1995.

பாலசுந்தரம், ச., தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரை, தஞ்சை, 1989.

John Ralston Marr, The Eight Tamil Anthologies, Ph.D. thesis, London, 1958.

Nilakanta Sastri, K.A., The Culture and History of the Tamils, Calcutta, 1964.

Sivathamby, K., Drama in Ancient Tamil Society, Madras, 1981.

Vaiyapurippillai, History of Tamil Language and Literature, NCBH- 1988.


*

# குடியரசுத்தலைவர் விருது
# 2005- 2006

## தொல்காப்பியர் விருது



பேராசிரியர் பெ. அடிகளாசிரியர்

## இளம் அறிஞர் விருது



முனைவர் இரா. அறவேந்தன்
(தாமோதரன்)

## இளம் அறிஞர் விருது



முனைவர் ய. மணிகண்டன்

## இளம் அறிஞர் விருது



முனைவர் வா.மு. சேதுராமலிங்க ஆண்டவர்

## இளம் அறிஞர் விருது



முனைவர் சி. கலைமகள்

## இளம் அறிஞர் விருது



முனைவர் கே. பழனிவேலு

# குடியரசுத்தலைவர் விருது
## 2006- 2007

### குறள்பீட விருது (அயல்நாட்டு அறிஞர்)



பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட்

### இளம் அறிஞர் விருது



முனைவர் மு. இளங்கோவன்

### இளம் அறிஞர் விருது



முனைவர் சு. சந்திரா

### இளம் அறிஞர் விருது



முனைவர் மா. பவானி

### இளம் அறிஞர் விருது



முனைவர் அரங்க. பாரி

### இளம் அறிஞர் விருது



முனைவர் இரா. கலைவாணி

# குடியரசுத்தலைவர் விருது
## 2007- 2008

### இளம் அறிஞர் விருது



முனைவர் அ. செல்வராசு

### இளம் அறிஞர் விருது



முனைவர் ப. வேல்முருகன்

### இளம் அறிஞர் விருது



முனைவர் ஆ. மணவழகன்

### இளம் அறிஞர் விருது



முனைவர் ச. சந்திரசேகரன்

### இளம் அறிஞர் விருது



முனைவர் சா. சைமன் ஜான்

# கருத்தரங்குகள்

கருத்தரங்கம் 1

## தொல்காப்பியச் செய்யுளியலும் செய்யுளாக்க மரபும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கும்பகோணம் அரசுக் கலைக்கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'தொல்காப்பியச் செய்யுளியலும் செய்யுளாக்க மரபும்' என்னும் தலைப்பில் 03.01.2011 முதல் 05.01.2011 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கை நடத்தின.

★

கருத்தரங்கம் 2

## சங்ககால மகளிரின் வாழ்வியல் மரபுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூர் நிர்மலா மகளிர் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'சங்ககால மகளிரின் வாழ்வியல் மரபுகள்' என்னும் தலைப்பில் 2011 சனவரி 6,7 ஆகிய நாள்களில் கருத்தரங்கை நடத்தின.

முனைவர் கோ.ந. முத்துக்குமாரசுவாமி
முனைவர் ம. மனோன்மணி
முனைவர் பா. வளன் அரசு
முனைவர் தி.வெ. இராசேந்திரன்
முனைவர் உலகநாயகி பழனி
பேராசிரியர் க. இளமதி சானகிராமன்
முனைவர் கி. சாந்தா பழனிச்சாமி
முனைவர் பா. சம்பத் குமார்
முனைவர் நிர்மல் தெரேசா
முனைவர் ஓ. பாலகிருஷ்ணன்







பேராசிரியர் த. திலீப் குமார்
பேராசிரியர் சே. புனிதா ஏகாம்பரம்
முனைவர் செ. பழனிச்சாமி

ஆகிய அறிஞர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

கருத்தரங்கம் 3

## செம்மொழி இலக்கியங்களில் சமூக, பண்பாட்டு, வாழ்வியல் விழுமியங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூர்ப் பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'செம்மொழி இலக்கியங்களில் சமூக, பண்பாட்டு, வாழ்வியல் விழுமியங்கள்' என்னும் தலைப்பில் 2011 சனவரி 7,8 ஆகிய நாள்களில் கருத்தரங்கை நடத்தின.

முனைவர் பே. சக்திவேல்
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
முனைவர் வெ.இரா. சத்தியமூர்த்தி
முனைவர் கே.ஏ. இராஜாராம்
முனைவர் ஓ. பாலகிருஷ்ணன்
திருமிகு பெ. கமலா
பேராசிரியர் பெ. மாதையன்
முனைவர் ச. இரவி
முனைவர் மி.சி. தியாகராஜன்

ஆகிய அறிஞர்கள் இக் கருத்தரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.





★

கருத்தரங்கம் 4

## தமிழெனும் உயர்தனிச் செம்மொழி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்பேடு தூய தாமஸ் கலை அறிவியல் கல்லூரியும் இணைந்து ‘தமிழெனும் உயர்தனிச் செம்மொழி’ என்னும் தலைப்பில் 2011 சனவரி 7,8 ஆகிய நாள்களில் கருத்தரங்கை நடத்தின.





★

கருத்தரங்கம் 5

## ஆசியப் பண்பாட்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை ஆசியவியல் நிறுவனமும் இணைந்து ‘ஆசியப் பண்பாட்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு’ என்னும் பொருளில் 16.01.2011 முதல் 18.01.2011 முடிய மூன்று நாள் கருத்தரங்கை நடத்தின.






★

கருத்தரங்கம் 6

## இயல், இசை, நாடகத்திற்குத் தமிழின் கொடை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுக்கோட்டைத் திலகவதியார் திருவருள் ஆதீனமும் இணைந்து ‘இயல், இசை, நாடகத்திற்குத் தமிழின் கொடை’ என்னும் பொருளில் 21.01.2011 முதல் 23.01.2011 முடிய மூன்று நாள் கருத்தரங்கை நடத்தின.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்
தமிழாகரர் தெ. முருகசாமி
புலவர் மு. பாலசுப்பிரமணியன்





பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்
முனைவர் சி. சேதுராமன்
முனைவர் மு. பழனியப்பன்
புலவர் மா. நாகூர்
புலவர் துரை நமச்சிவாயம்
முதுமுனைவர் இரா. இளங்குமரனார்
முனைவர் வேல். கார்த்திகேயன்
புலவர் ஆறு. மெய்யாண்டவர்
புலவர் மு. வைத்தியநாதன்
கவிஞர் நா. மீனவன்
கவிஞர் சி. செகந்நாதன்
முனைவர் வை. இரத்தினசபாபதி
முனைவர் தா. மணி
முனைவர் அங்கயற்கண்ணி
முனைவர் சுரேஷ் சிவன்
முனைவர் இரா. செல்வக் கணபதி
முனைவர் அய்க்கண்

ஆகிய அறிஞர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

★

கருத்தரங்கம் 7

## சங்க இலக்கியங்கள் காட்டும் நெய்தல் நில வாழ்க்கை

செம்மொழித் தமிழாய்வு நிறுவனமும் கடலூர்ப் பெரியார் கலைக்கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'சங்க இலக்கியங்கள் காட்டும் நெய்தல் நில வாழ்க்கை' என்னும் தலைப்பில் 27.01.2011 முதல் 29.01.2011 முடிய மூன்று நாள் கருத்தரங்கை நடத்தின.

27.01.2011 அன்று காலை 9.30 மணியளவில் கருத்தரங்கத் தொடக்க விழா நடைபெற்றது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறைத் தலைவருமான முனைவர் சு. தமிழாழிக் கொற்கை வேந்தன் அனைவரையும்வரவேற்கப் பேராசிரியர் அ. அர்த்தநாரி கருத்தரங்க அறிமுகவுரையாற்றினார். கல்லூரி முதல்வர் (பொ) க. அரங்கநாதன் தலைமையில் கடலூர்ச் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐயப்பன் கருத்தரங்கினைத் தொடங்கிவைத்துச் சிறப்புரையாற்றினார். ஆங்கிலத் துறைத் தலைவர் ஆர். நடராசன், வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் ச. காந்திமதி, கணிதத்துறைத் தலைவர் முனைவர் ச. ஞானசேகரன், விலங்கியல் துறைத் தலைவர் இரா. ஜெயந்தி தேவி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்த்துறை






இணைப்பேராசிரியர் ப. குமரன் நன்றி நவிலத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

முனைவர் செ.மா.க. வசந்த கோகிலம்
முனைவர் கே. பழனிவேலு
முனைவர் சோ. கண்ணதாசன்
பேராசிரியர் ஆ. திருநாகலிங்கம்
முனைவர் பா. நடராசன்
முனைவர் நா. பாஸ்கரன்
முனைவர் சீ. பிரேமகுமாரி
முனைவர் ஞா. ஸ்டீபன்
முனைவர் சொ. ஏழுமலை
முனைவர் ப. குமரன்
முனைவர் ச. விஷ்ணுதாசன்
முனைவர் பி. மகாலிங்கம்
திரு வை. இராமன்
முனைவர் வீ. பன்னீர்செல்வம்
செல்வி இரா. விசாலாட்சி
முனைவர் ஜா. பூரணி
முனைவர் நா. தனராசன்
முனைவர் நா. காந்திமதி
முனைவர் யோ. தர்மராஜ்
முனைவர் மு. கற்பகம்
முனைவர் பெ. ஹென்றி ஜூலியஸ்
முனைவர் என். சுபா
முனைவர் கி. கவிதா

இக்கருத்தரங்கில் கடலூர்ப் பெரியார் கலைக்கல்லூரி, சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, சிதம்பரம் அரசுக் கலைக்கல்லூரி, குறிஞ்சிப்பாடி திருவள்ளுவர் கலை அறிவியல் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 70 மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

கருத்தரங்க நிறைவு விழா 29.01.2011 அன்று மாலை நடைபெற்றது. இவ்விழாவில் முனைவர் வீ. பன்னீர்செல்வம் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் (பொ) பேராசிரியர் க. அரங்கநாதன் விழாவிற்குத் தலைமையேற்றுச் சிறப்புரையாற்றிப் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். கருத்தரங்க மதிப்புரையினைப் பேராசிரியர் அ. அர்த்தநாரி வழங்கினார். கருத்தரங்கில் பங்கேற்ற மூன்றாமாண்டுத் தமிழ் இலக்கிய மாணவர்களான ப. அசோக்குமார், க. மகாலட்சுமி ஆகிய இருவரும் கருத்தரங்கில் பங்கேற்ற மாணவர்கள் சார்பாகக் கருத்தரங்கத்

தொகுப்புரை வழங்கினார்கள். நிறைவாக முனைவர் சு. தமிழாழிக் கொற்கைவேந்தன் நன்றிகூற விழா இனிதே நிறைவடைந்தது.

★

**கருத்தரங்கம் 8**

## பத்துப்பாட்டும் இலக்கிய மரபுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரித் தமிழ் உயராய்வு மையம் 'பத்துப்பாட்டும் இலக்கிய மரபுகளும்' என்னும் பொருண்மையில் 27.01.2011 முதல் 29.01.2011 வரை மூன்று நாள் கருத்தரங்கை நடத்தியது.

**பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்**
**பேராசிரியர் தமிழண்ணல்**
**பேராசிரியர் அ. அறிவுநம்பி**
**பேராசிரியர் பழ. முத்துவீரப்பன்**
**பேராசிரியர் சரளா இராசகோபாலன்**
**பேராசிரியர் க. முத்துச்சாமி**
**பேராசிரியர் நிர்மலா மோகன்**
**முனைவர் சு. அழகியநம்பி**
**முனைவர் வீ. மோகன்**
**முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை**
**பேராசிரியர் வ. ஜெயா**
**முனைவர் வீ. கோபால்**
**முனைவர் இரா. ஜெகதீசன்**
**பேராசிரியர் சு. இராசாராம்**
**முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்**
**முனைவர் ச. திருஞானசம்பந்தம்**
**முனைவர் சு. விஜயன்**
**முனைவர் கு. இராசரத்தினம்**
**முனைவர் கோ.விஜயா**
**முனைவர் பா. வேலம்மாள்**
**முனைவர் என். கிருஷ்ணன்**

ஆகிய அறிஞர்கள் இக்கருத்தரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

**கருத்தரங்கம் 9**

## தொல்காப்பிய இலக்கணக் கோட்பாடும் பிற திராவிட வடமொழி இலக்கணக் கோட்பாடுகளும் (எழுத்து, சொல்)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சேலம் பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து 'தொல்காப்பிய இலக்கணக் கோட்பாடும் பிற திராவிட வடமொழி இலக்கணக் கோட்பாடுகளும் (எழுத்து, சொல்)' என்னும் பொருளில் 09.02.2011 முதல் 11.02.2011 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின.

இக்கருத்தரங்கின் தொடக்க விழா 09.02.2011 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் பேராசிரியர் பெ. மாதையன் வரவேற்புரை நிகழ்த்தினார். பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கி. முத்துச்செழியன் தலைமையுரையாற்றினார். சென்னைப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் பொற்கோ தொடக்கவிழாப் பேருரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி கருத்தரங்க நோக்கவுரையாற்றினார். பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் தி. பெரியசாமி நன்றிகூறத் தொடக்க விழா நிறைவுபெற்றது.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**பேராசிரியர் கி. அரங்கன்**
**பேராசிரியர் இரா. அறவேந்தன்**
**பேராசிரியர் எஸ். ஆரோக்கியநாதன்**
**முனைவர் ஆ. கார்த்திகேயன்**
**பேராசிரியர் செ.வை. சண்முகம்**
**முனைவர் இரா. சம்பத்**
**முனைவர் இரா. சீனிவாசன்**
**பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன்**
**திரு அ. செந்தில்நாராயணன்**
**பேராசிரியர் தமிழவன்**
**பேராசிரியர் நடராசப்பிள்ளை**
**பேராசிரியர் பெ. மாதையன்**
**பேராசிரியர் கி. நாச்சிமுத்து**
**முனைவர் டி.பி. வேணுகோபாலப் பணிக்கர்**
**பேராசிரியர் புனல் க. முருகையன்**
**பேராசிரியர் இராம. சுந்தரம்**

இந்தக் கருத்தரங்கின் நிறைவு விழா 11.02.2011 அன்று மாலை நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் பெ. மாதையன் வரவேற்புரையாற்றினார். பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கி. முத்துச்செழியன் தலைமையுரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய மேனாள் இயக்குநர் பேராசிரியர் செ.வை. சண்முகம் நிறைவுப்பேருரை நிகழ்த்தினார். தமிழ்ப்பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி கருத்தரங்க மதிப்புரையாற்றினார். நிறைவாகத் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் மோ. தமிழ்மாறன் நன்றிகூறினார்.

★

**கருத்தரங்கம் 10**

## அமைப்பியல் நோக்கில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சின்னக்கலையம்புத்தூர் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'அமைப்பியல்





நோக்கில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும்' என்னும் பொருளில் 09.02.2011 முதல் 11.02.2011 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின.

முனைவர் இ.கி. இராமசாமி
முனைவர் பெ. சுப்பிரமணியன்
முனைவர் அமுதன்
முனைவர் ஞானப்பழம்
பேராசிரியர் இரா. மோகன்
பேராசிரியர் நிர்மலா மோகன்
முனைவர் வாசுகி ஜெயரத்னம்
முனைவர் இரா. இரேணுகாதேவி
முனைவர் வீ. மோகன்
முனைவர் இ. பேச்சிமுத்து
முனைவர் லோகேஸ்வரி
முனைவர் வ. கிருஷ்ணன்
முனைவர் க. கிருஷ்ணமூர்த்தி
முனைவர் சி. அயோத்தி
முனைவர் மு. மதியழகன்
முனைவர் சி. வாசுகி

ஆகிய அறிஞர்கள் இக்கருத்தரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

கருத்தரங்கம் 11

## தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் காணலாகும் பேரிடர் மேலாண்மைச் சிந்தனைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இணைந்து 'தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் காணலாகும் பேரிடர் மேலாண்மைச் சிந்தனைகள்' என்னும் பொருண்மையில் 09.02.2011 முதல் 11.02.2011 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் இரெ. நீலகண்டன் இதன் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

முனைவர் அ. குணசேகரன்
திரு ஆ. இராசா
திருமிகுஆர். சண்முகவல்லி
திரு ஆர். வேங்கடாசலபதி
இரா. இராஜாராம்
முனைவர் இரா. கலியபெருமாள்
முனைவர் இரா. பவுன்துரை
திரு இரா. முருகானந்தம்
முனைவர் இரா. விஜயராணி
திருமிகு எல். ஹரினி
திருமிகு என். பிரியதர்ஷினி
திரு எஸ். சஞ்சீவி
திருமதி எஸ். சரண்யா
திரு க. கதிரேசன்
திரு க. சங்கர்
திரு க. பழநிவேல்
முனைவர் க.ப. கணபதி
திரு க.ஜெ. குமணன்
முனைவர் கா. சத்தியபாமா
முனைவர் கி.இரா. சங்கரன்
திரு குரு பாலமுருகன்
திருமிகு கே. இரேணுகா
திருமிகு கே. சௌமியா
திரு கே. மணிகண்டன்
திரு ச. இராசேந்திரன்
திரு ச. குணசேகரன்
முனைவர் ச. சுஜாதா
திரு ச. வினோத் குமார்
திரு சாம்ராட் சின்கா
திரு சி. அன்பழகன்
முனைவர் சி. காந்தி
முனைவர் சி. சித்ரா
முனைவர் சு. மகாலெட்சுமி
திரு சு. யுவராஜ்
முனைவர் செ. இரவிசங்கர்
திரு சோம. இராமசாமி
திருமிகு த. ரூபி
முனைவர் தேன்மொழி
முனைவர் ந. சேஷாத்திரி
திரு ந. முத்துக்கிருஷ்ணன்
திரு நா. நாகப்பன்
முனைவர் நா. ஜவகர் ராஜ்
முனைவர் ப. உதய கணேசன்
முனைவர் ப. மகாலட்சுமி
திரு பா. தினேஷ்
திரு பு. மணிமாறன்
பேராசிரியர் பெ. அருள்
திருமிகு ம. நிஷாந்தினி
திருமிகு மா. கமலா
முனைவர் மா. கோவிந்தராசு
திரு மாங்மின்லென் தௌதங்
முனைவர் மு. பழனியப்பன்
திருமிகு மோ. சுகன்யா
முனைவர் மோ. தமிழ்மாறன்
முனைவர் இரெ. நீலகண்டன்
திரு வி. ரமேஷ்
திரு வெ. இராதா கிருஷ்ணன்
திரு ஜி. மணிமாறன்
திருமிகு ஜெ. உமா
திரு ஜெ. கிஷோர் ஆனந்த்
திரு ஜெ. சரவணவேல்
திரு ஜோ. சேவியர் இஞ்ஞாசி முத்து
முனைவர் ஜோ. பிரின்ஸ்

திருமிகு ஜோ. மகேஸ்வரி
திருமிகு ஹேமப்பிரியா

ஆகிய அறிஞர்கள் இக்கருத்தரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

கருத்தரங்கம் 12

## திருக்குறள் போற்றும் விழுமியங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை வானவில் பண்பாட்டு மையமும் இணைந்து 'திருக்குறள் போற்றும் விழுமியங்கள்' என்னும் பொருண்மையில் 11.02.2011 முதல் 13.02.2011 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின.

★

கருத்தரங்கம் 13

## தொல்தமிழ் - மலையாளம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனமும் இணைந்து 'தொல்தமிழ் - மலையாளம்' என்னும் பொருளில் 22.02.2011 முதல் 24.02.2011 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின.

22.02.2011 அன்று காலை வ.ஐ. சுப்பிரமணியம் நினைவு வளாகத்தில் உள்ள இராஜராஜ வர்மா அரங்கில் தொடக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் முனைவர் நடுவட்டம் கோபாலகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவன இயக்குநர் பேராசிரியர் எம். இராமா தலைமையுரையாற்றினார். பேராசிரியர் புதுசேரி இராமச்சந்திரன் ' திராவிட ஆய்வுகளுக்கு முனைவர் வ.ஐ. சுப்பிரமணியத்தின் பங்களிப்புகள்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். திராவிட மொழியியல் கழகத் தலைவர் பேராசிரியர் தி. முருகரத்தனம், கேரளப் பல்கலைக்கழக மொழியியல் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜி.கே. பணிக்கர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திராவிட மொழியியல் கழகச் செயலர் பேராசிரியர் என். இராஜேந்திரன் நன்றிகூறத் தொடக்க விழா நிறைவுற்றது.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

முனைவர் டி.பி. வேணுகோபாலப் பணிக்கர்
முனைவர் எம். ஸ்ரீநாதன்
முனைவர் அ. பூலோகரம்பை
பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்
முனைவர் எல். குளோறியா சுந்தரமதி
திரு பசவராஜ கொடகுந்தி
பேராசிரியர் எம்.இ. மாணிக்கவாசகம்
திரு டி. மாதவ மேனன்
முனைவர் என். கோபிநாதன் நாயர்
முனைவர் இ.வி.என். நம்பூதிரி
முனைவர் எம்.ஆர். இராகவ வாரியார்
முனைவர் அ. பரிமளகாந்தம்
முனைவர் எஸ். குஞ்சம்மா
முனைவர் ஏ. ரோஸ் மேரி
முனைவர் டி. விஷ்ணுகுமரன்
முனைவர் எஸ். இராதாகிருஷ்ணன் மல்லசேரி
பேராசிரியர் தி. முருகரத்தனம்
திரு கே. இரவீந்திரன்
முனைவர் முனைவர் இ. ஜேம்ஸ்
திரு ஆர். டேனியல்
முனைவர் ஐராவதம் மகாதேவன்
முனைவர் பி. ஜெயகிருஷ்ணன்
திருமிகு எஸ். விஜயராஜேஸ்வரி
முனைவர் ஆர்.ஆர். தம்புரான்
பேராசிரியர் ஜி.கே. பணிக்கர்
பேராசிரியர் எம். தட்சிணாமூர்த்தி
முனைவர் கி. நாச்சிமுத்து
முனைவர் நடுவட்டம் கோபாலகிருஷ்ணன்
முனைவர் விலக்குடி இராஜேந்திரன்
முனைவர் டி.பி. சங்கரன்குட்டி நாயர்
முனைவர் என். இராஜேந்திரன்
திரு சௌரவ் சக்ரபொர்த்தி
திரு என். செந்தில்
திரு எம். பிரபாகரன்
திரு எஸ். காமராஜ்
திரு எஸ். சரவணக்குமார்
திரு எஸ். திருவேங்கடம்
முனைவர் எஸ். வேலாயுதம்
முனைவர் கே.ஷிஜு
திரு ஆர். இராகேஷ்
செல்வி வி.கே. அனுப்பமா
திரு பி. சிவப்பிரசாத்

கருத்தரங்க நிறைவு விழா 24.02.2011 அன்று மாலை நடைபெற்றது. இவ்விழாவில் முனைவர் எம். இராமா அனைவரையும் வரவேற்றார். முனைவர் எல். குளோறியா சுந்தரமதி தலைமை தாங்கினார். முனைவர் எஸ். இராதாகிருஷ்ணன் மல்லசேரி, சௌரவ் சக்ரபொர்த்தி ஆகியோர் பங்கேற்பாளர் சார்பாகக் கருத்துரை வழங்கினர். முனைவர் ஜி.கே. பணிக்கர் நிறைவுரையாற்றினார். இறுதியாக முனைவர் இ. ஜேம்ஸ் நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

★

கருத்தரங்கம் 14

## சங்க இலக்கியங்களை மொழிபெயர்த்தல்: சிக்கல்களும் தீர்வுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நாகர்கோவில் எஸ்.டி. இந்துக் கல்லூரி ஆங்கிலத்துறையும் இணைந்து 'சங்க இலக்கியங்களை மொழிபெயர்த்தல்: சிக்கல்களும் தீர்வுகளும்' என்னும் தலைப்பில் 23.02.2011 முதல் 25.02.2011 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கை நடத்தின.

திருமிகு கே. ஹேமா
திரு டி. சேவியர் பெஸ்கி ஆரோக்கியராஜ்
திரு சி. சிவசண்முகம்
பேராசிரியர் உள்ளூர் எம். பரமேஸ்வரன்
திரு கே. சையது அலி பாதுஷா
முனைவர் எஸ். நாகராஜன்
முனைவர் ந. முருகையன்
திரு செந்தீ நடராசன்
முனைவர் கே. பாலசந்திரன்
திரு பி. சத்தியராஜேஸ்வரன்
திரு எம். கண்ணன்

திரு எஸ். நடராஜன்
திரு க. மீனாட்சி சுந்தர மூர்த்தி
திரு டி. ஆனந்தன்
முனைவர் இரா. முரளிதரன்
முனைவர் இரா. செல்வி
திரு அ.கா. பெருமாள்
முனைவர் என். கிருஷ்ணன்
முனைவர் எஸ். நாகம்மாள்
முனைவர் இரா. சீனிவாசன்
முனைவர் டி. விஜயலட்சுமி
திரு ந. முருகேசபாண்டியன்
முனைவர் சு. ஜெயக்குமாரி
பேராசிரியர் இ. பன்னீர் செல்வம்
திரு கே. நாராயணன்
முனைவர் பா. வேலம்மாள்
பேராசிரியர் மா. மகாலட்சுமி
முனைவர் சி. சாவித்திரி
முனைவர் எஸ். கலாமணி
செல்வி பி. இரேவதி

ஆகிய அறிஞர்கள் இக்கருத்தரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

கருத்தரங்கம் 15

## தொல்காப்பிய நாள் விழா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் சென்னைச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் 2011 மார்ச்சு 3, 4 ஆகிய நாள்களில் தொல்காப்பிய நாள் விழாவை நடத்தியது.

★

கருத்தரங்கம் 16

## தொல்காப்பிய இலக்கணக் கோட்பாடுகளும் அவற்றின் வளர்ச்சியும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறை 'தொல்காப்பிய இலக்கணக் கோட்பாடுகளும் அவற்றின் வளர்ச்சியும்' என்னும் தலைப்பில் 2011 மார்ச்சு 3, 4 ஆகிய நாள்களில் கருத்தரங்கினை நடத்தியது.






★

கருத்தரங்கம் 17

## தொல்காப்பிய நாள் விழா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் திருவண்ணாமலைத் தமிழ்ச் சங்கம் 06.03.2011 அன்று தொல்காப்பிய நாள் விழாவை நடத்தியது.

★

கருத்தரங்கம் 18

## சங்க இலக்கியம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சாவூர் உலகத் திருக்குறள் பேரவையும் இணைந்து 'சங்க இலக்கியம்' என்னும் பொருளில் 2011 மார்ச்சு 18,19 ஆகிய நாள்களில் கருத்தரங்கினை நடத்தின.

முதுமுனைவர் தி.ந. இராமச்சந்திரன்
பேராசிரியர் பெ. மாதையன்
முனைவர் சண்முக. செல்வகணபதி
முனைவர் அ. தேவகி
முனைவர் செ. கற்பகம்

ஆகிய அறிஞர்கள் இக்கருத்தரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.






★

கருத்தரங்கம் 19

## செவ்வியல் இலக்கியத்தில் பல்லுயிரினப் பாதுகாப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறையும் இணைந்து 'செவ்வியல் இலக்கியத்தில் பல்லுயிரினப் பாதுகாப்பு' என்னும் தலைப்பில் 2011 மார்ச்சு 30,31 ஆகிய நாள்களில் கருத்தரங்கினை நடத்தின.






★

கருத்தரங்கம் 20

## சங்க கால மகளிர்

சங்க கால மகளிர் என்னும் பொருளிலான கருத்தரங்கம் 20.05.2011ஆம் நாள் காலை 10.00 மணியளவில் தாஜ் கொரமண்டல் அரங்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத் தலைவர், மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி ட. புரந்தேசுவரி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

அவர் தம் உரையில் சங்க காலச் சமுதாயத்தில் மகளிர் தமக்கே உரிய சிறந்த இடத்தைப் பெற்றிருந்தனர் என்றும் அக்காலக் கட்டத்தில் பெண்ணடிமைத்தனம் தோன்றியிருக்கவில்லை என்பதனையும் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டார். சமூகத்தில் பெண் சிசுக் கொலை, பெண் கல்வி மறுப்பு, குடும்பத்தில் பெண் எதிர் கொள்ளும் சிக்கல்கள், இரட்டைப் பணிச் சுமை, சமமான ஊதியமின்மை, பணியிடங்களில் எதிர் கொள்ளும் சிக்கல்கள், பெண்ணைச் சந்தைப் பொருளாக்கிப் பார்க்கும் வாணிக நோக்கு போன்ற இத்தகைய சிக்கல்கள் காணப்பெறாத காலம் சங்ககாலம் எனக் குறிப்பிட்டுச் சங்க காலச் சமுதாயம் மகளிரைப் பொறுத்தவரை பொற்காலம் என்பதில் ஐயமில்லை என்றார். மேலும் உலக அளவில் பெண் விடுதலை இயக்கங்கள் தோன்றியதைக் குறிப்பிட்டுத் தமிழகத்தில் எப்போது தழைத்தோங்கியது யார்யாரெல்லாம் பெண் விடுதலைக்காகப் போராடினார்கள் என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

இவரது உரையினைத் தொடர்ந்து கவிப்பேரரசு வைரமுத்து, பேராசிரியர் மீனாட்சி முருகரத்தனம், எழுத்தாளர் பாமா, பேராசிரியர் மா. நன்னன் ஆகியோர் சங்க கால மகளிரின் பன்முகத் தன்மையை அவரவர்களின் நோக்கில் ஆழமாகவும் நயமாகவும் எடுத்துரைத்தனர்.

தொடக்க விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் க. மோகன் வரவேற்புரையும் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி நன்றியுரையும் வழங்கினர்.

கருத்தரங்க அமர்வுகள் 20.05.2011 பிற்பகல் முதல் தேசியத் தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்றன. சங்க கால மகளிர் குறித்துப் பெறப்பட்ட 140 கட்டுரைகளில் துறைசார் வல்லுநர் குழுவால் 43 கட்டுரைகள் மட்டும் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் 27 கட்டுரைகள் 11 அமர்வுகளில் அறிஞர்களால் வழங்கப்பெற்றன. கட்டுரையாளர்கள் தவிர 100 நோக்கர்களும் அழைப்பாளர்களும் அமர்வுகளில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

விளிம்பு நிலை மக்கள், பெண்பாற் புலவர்கள், ஆளுமைத் திறன், பெண்ணியம், பெண்மொழி, பாலின நோக்கு, இலக்கிய மாந்தர்கள், மகளிர் மாட்சி, கைம்மை, சமுகவியல் நோக்கு, பன்முக நோக்கு எனப் பல்வேறு தலைப்புக்களில் நடந்த அமர்வுகளுக்குப் பின்வரும் அறிஞர்கள் தலைமை தாங்கினர்.






பேராசிரியர் கே.ஏ. குணசேகரன்
பேராசிரியர் மீனாட்சி முருகரத்தனம்
பேராசிரியர் மா. நன்னன்
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
பேராசிரியர் அ. இராமசாமி
பேராசிரியர் க. இராமசாமி
பேராசிரியர் அரிமளம் சு. பத்மநாபன்
முனைவர் அ. மங்கை
முனைவர் அரங்க. மல்லிகா
திரு. து. இரவிக்குமார்
முனைவர் சரசுவதி இராமநாதன்

அமர்வுகளில் கட்டுரைகள் வழங்கியோர் வருமாறு :

முனைவர் சுந்தர. ஆவுடையப்பன்
திரு. ரவிசுப்பிரமணியன்
பேராசிரியர் க. பஞ்சாங்கம்
பேராசிரியர் அ. இராமசாமி
முனைவர் சா. இன்குலாப்
முனைவர் சரசுவதி இராமநாதன்
முனைவர் அ. மங்கை
முனைவர் மு. ஜீவா
முனைவர் க. அ. ஜோதிராணி
முனைவர் அரங்க. மல்லிகா
முனைவர் ச. சிவகாமி
பேராசிரியர் க. இளமதி ஜானகிராமன்
முனைவர் நாக. செங்கமலத்தாயார்
கவிஞர் குட்டி ரேவதி
முனைவர் க. ஜவஹர்
முனைவர் ந. தேவி
முனைவர் பொ.நா. கமலா
முனைவர் க. செந்தில்குமார்
முனைவர் மு. பழனியப்பன்
திருமிகு அ. மோகனா
திருமிகு மு. கஸ்தூரி
திரு மு.தேவராஜ்
திருமிகு சு. சுஜா
திரு மு. முனீஸ் மூர்த்தி
திரு இ. வீரசக்திவேல்
பேராசிரியர் தாயம்மாள் அறவாணன்
பேராசிரியர் மீனாட்சி முருகரத்தனம்

சங்க காலத் தமிழ்ச் சமூகத்து மகளிரின் நிலையைச் சங்க இலக்கியங்களின் வழியும் சங்க இலக்கியத்தில் காணப்படும் பெண்பாற் புலவர்களின் கருத்துக்களைக் கொண்டும் அரசியல், சமூகம், பொருளியல், உரிமை, உறவு போன்ற பொருண்மைகளில் அந்நாள் மகளிர் பெற்றிருந்த நிலை கட்டுரைகளில் பதிவு செய்யப்பட்டது. மேலும் இந்நாள் மகளிர் பெற்றிருக்கும் உரிமைகள், புதிய கருத்தாக்கங்கள், சமூக மாற்றங்கள், மேலை நாகரிகத் தாக்கங்களோடு ஒப்பிட்டுப் பார்த்துப் புதிய முடிவுகளைப் பெற்று அதை இன்றைய சமூகத்திற்கும் மகளிர் மேம்பாட்டிற்கும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இந்தக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள் அலசி ஆராய்ந்தன.

கருத்தரங்க நிறைவு விழா 22.05.2011 அன்று மாலை 4.15 மணிக்கு நடைபெற்றது. கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் அன்னி தாமசு வரவேற்புரை வழங்கினார். எழுத்தாளரும் மார்க்சிய ஆய்வாளருமான கோவை ஞானி நிறைவுப் பேருரையாற்றினார். அவர்தம் உரையில் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் பல்வேறு கூறுகளைச் சுட்டிக்காட்டிச் சங்க இலக்கியத்தை மார்க்சியக் கண்ணோட்டத்தில் சிறப்புற விளக்கினார்.

கவிவேந்தர் கா. வேழவேந்தன், பேராசிரியர் மா. நன்னன், பேராசிரியர் தேவதத்தா, திரு து. இரவிக்குமார், முனைவர் அரங்க. மல்லிகா ஆகியோர் கருத்துரை வழங்கினர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதன்மை ஆய்வு வளமையர் முனைவர் க. நர்மதா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி அவர்களின் நன்றியுரையுடன் கருத்தரங்கம் இனிதே நிறைவுபெற்றது.

★

கருத்தரங்கம் 21

## செம்மொழி இலக்கியங்களில் வாழ்வியல் அறங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரித் தமிழ்த்துறை ‘செம்மொழி இலக்கியங்களில் வாழ்வியல் அறங்கள்’ என்னும் தலைப்பில் 28.11.2011 முதல் 30.11.2011 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தியது.

இக்கருத்தரங்கின் தொடக்க விழா 28.11.2011 அன்று காலை 8.30 மணியளவில் தொடங்கியது. இவ்விழாவில் முனைவர் பிரேமா வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரி நிர்வாகக் குழுத் தலைவர் முனைவர் அ.மு. சுவாமிநாதன் தலைமையுரையாற்றினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் நித்தியகல்யாணி கருத்தரங்க நோக்கவுரையாற்றினார். மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் க.ப. அறவாணன் சிறப்புரையாற்றினார். அவ்வுரையில் அவர், அறத்திற்கு இணையான ஆங்கிலச் சொல் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு வாழ்த்துரைவழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் கருத்தரங்க மையவுரையாற்றினார்.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

திரு மணவை முஸ்தபா
பேராசிரியர் தாயம்மாள் அறவாணன்
முனைவர் திரிபுரசுந்தரி
முனைவர் தி. மகாலட்சுமி
முனைவர் உலகநாயகி பழனி
முனைவர் ப. மகாலிங்கம்
முனைவர் இரா. கலாவதி

**முனைவர் இரா. ஜெகதீசன்**
**முனைவர் ஜா. சிந்தியெயாள்**
**முனைவர் மூ.ஈ. அகமது மரைக்காயர்**
**முனைவர் தா. நீலகண்டப் பிள்ளை**
**பேராசிரியர் த. வசந்தாள்**
**முனைவர் எழிலரசி பாலசுப்பிரமணியன்**
**முனைவர் யோ. தர்மராஜ்**
**முனைவர் தா. எ. ஐசக் சாமுவேல் நாயகம்**
**முனைவர் ச. திருஞானசம்பந்தம்**
**முனைவர் பொன். சண்முகம்**
**முனைவர் பெ. நிர்மலா**
**முனைவர் கு. மங்கையர்க்கரசி**
முனைவர் நா. ஜெயப்பிரகாஷ்
முனைவர் பு. ஜார்ஜ்
முனைவர் எம். நித்தியகல்யாணி

*30.11.2011 அன்று மாலை நிறைவு விழா நடைபெற்றது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி தலைமையுரையாற்றினார். முனைவர் மா. நன்னன் கருத்தரங்கத் தொகுப்புரை வழங்கினார். முனைவர் எம். நித்தியகல்யாணி நன்றிகூற விழா இனிதே நிறைவடைந்தது.*

★

# முனைவர் பட்டம், முனைவர் பட்ட மேலாய்வு உதவித் தொகைக்கான எழுத்துத் தேர்வு

*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 2011-12ஆம் கல்வியாண்டுக்கான முனைவர் பட்டம், முனைவர் பட்ட மேலாய்வு மேற்கொள்வோருக்கு உதவித்தொகை வழங்குவதற்கான எழுத்துத்தேர்வு 24.08.2011 அன்று பிற்பகல் மாநிலக் கல்லூரியில் உள்ள புதிய தேர்வுக் கூடத்தில் நடைபெற்றது.*

*இத்தேர்வில் முனைவர் பட்ட மேலாய்வு உதவித்தொகைக்கு 38 மாணவர்கள் தேர்வு எழுதினர். முனைவர் பட்ட ஆய்வு உதவித் தொகைக்கு 127 மாணவர்கள் தேர்வு எழுதினர்.*



பணியரங்கம் 1

## நாலடியார் செம்பதிப்புப் பணியரங்கு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகிய நூல்களின் செம்பதிப்புக்கான பணியரங்கு 05.02.2011 முதல் 14.02.2011 வரை நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட வல்லுநர்கள் வருமாறு:

பேராசிரியர் அன்பன்
முனைவர் கா.கோ. வேங்கடராமன்
திரு கோ. உத்திராடம்

★

பணியரங்கம் 2

## இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்விப் பணியரங்குகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதன்மைத் திட்டங்களுள் ஒன்றான இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்வித் திட்டத்தின்கீழ் இரண்டு கட்டங்களாகப் பணியரங்குகள் நடத்தப்பட்டன.

அ) 05.02.2011 முதல் 19.05.2011 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்ற பதினைந்து நாள் பணியரங்கில் பேராசிரியர் சு. இராசாராம் வல்லுநராகக் கலந்துகொண்டார். இப்பணியரங்கில் கருத்தலகு அகம் (ஒன்று), இலக்கணம் - அகம் (ஐந்து) ஆகிய பாடங்களை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பெற்றது.

ஆ) 27.09.2011 முதல் 11.10.2011 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்ற பதினாறு நாள் பணியரங்கில் பேராசிரியர் சு. இராசாராம் வல்லுநராகக் கலந்துகொண்டார். இப்பணியரங்கில் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தியும் பேராசிரியர் கா.கோ. வேங்கடராமனும் அகம், இலக்கணம் (அகம்) ஆகிய கருத்தலகுகளில் குறிப்பிட்டிருந்த திருத்தங்களைப் பார்வையிட்டுத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளும் பணி செய்யப்பெற்றது.

★

பணியரங்கம் 3

## செவ்வியல் நூல்களுக்கான சொல்லடைவு, தொடரடைவு உருவாக்கப் பணியரங்கு

செம்மொழித் தமிழ் நூல்களின் தரவக உருவாக்கம் என்பது செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பத்து முதன்மைத் திட்டப் பணிகளில் ஒன்றாகும். செவ்வியல் நூல்களுக்கான சொல்லடைவு, தொடரடைவு உருவாக்கம் குறித்த பணியரங்கம் 2011 மார்ச்சு 21 முதல் 30 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது.



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் கோ. பழனிராஜன் இப்பணியரங்கை ஒருங்கிணைத்தார். கீழ்க்காணும் அறிஞர்கள் பணியரங்கில் வளமையராகக் கலந்துகொண்டார்கள்.

பேராசிரியர் க. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் வ. ஜெயதேவன்
பேராசிரியர் பெ. மாதையன்
முனைவர் ந. ஆனந்தி
முனைவர் மகாலட்சுமி
முனைவர் க. ஜவகர்
முனைவர் இரா. சங்கர்
முனைவர் கோ. சீனிவாசன்
முனைவர் பி. மஞ்சுளா
முனைவர் வாணி அறிவாளன்
முனைவர் கி. காவிரி
முனைவர் அ. ஜெயக்குமார்
முனைவர் ஜெ. முத்துச்செல்வன்
திரு பெ. முத்துசாமி
திரு கோ. சதீஸ்
திரு பா. ராஜா
முனைவர் வீ. பால்முருகன்
முனைவர் சி. கார்த்திகேயன்
திரு இரா. அகிலன்
திரு அ. சண்முகசுந்தரம்
முனைவர் பி. கணேசன்
முனைவர் ம. தமிழ்வாணன்

இப்பணியரங்கில் சொல்லடைவு, தொடரடைவு மேற்கொள்ளவேண்டிய நூல்களின் தரமான பதிப்புத் தேர்வு,





சொற்பிரிப்பு நெறிமுறைகள், மேற்கோள் காட்டும் முறை ஆகியன பற்றிய விரிவான பயிற்சி வழங்கப்பட்டது.

★

பணியரங்கம் 4

## இறையனார் களவியல் செம்பதிப்புப் பணியரங்குகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் செம்பதிப்புத் திட்டத்தின்கீழ் இறையனார் களவியல் செம்பதிப்புப் பணி நடைபெறுகிறது. இதன் ஒரு கூறாக இறையனார் களவியலின் பாடவேறுபாடுகளைச் சுவடிகள்வழி ஆய்ந்து சரிசெய்வதற்கென இரண்டு பணியரங்குகள் நடத்தப்பட்டன.

அ) முதல் பகுதி 16.09.2011 முதல் 18.09.2010 முடிய

மூன்று நாள்கள் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டோர் விவரம் வருமாறு:

**பேராசிரியர் அ. தாமோதரன்**
**பேராசிரியர் க. இராமசாமி**
**பேராசிரியர் சோ.ந. கந்தசாமி**
**பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியம்**
**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
**முனைவர் கா.கோ. வேங்கடராமன்**
**முனைவர் கி. ஜெயக்குமார்**
**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
**திரு க. பத்மநாபன்**
**திரு அ. முருக சுவாமிநாதன்**
**திரு தி.ஞா. அருள் ஒளி**

ஆ) இரண்டாம் பகுதி 19.12.2011 முதல் 28.12.2011 முடிய பத்து நாள்கள் நடைபெற்றது. இதில் இறையனார் களவியல் நூலின் செம்பதிப்பிற்கான இறுதி வரைவு உருவாக்கப்பட்டது. இப்பணியரங்கில் கலந்துகொண்டோர்:

**பேராசிரியர் அ. தாமோதரன்**
**முனைவர் கி. ஜெயக்குமார் (ஒருங்கிணைப்பாளர்)**
**திரு தி.ஞா. அருள் ஒளி (தரவு உள்ளீட்டாளர்)**
**திரு பாபு (உதவியாளர்)**

பதிப்புரை, மூலம், பாடத்தேர்வு விளக்கம், சுவடி விளக்கம், சுவடித் திறப்பு, அமைப்பு முறை, கலைச்சொல் நிரல், சொல்லடைவு முதலியவற்றை ஆராய்ந்து தேவையான திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் இப்பணியரங்கு அமைந்தது.

## பேராசிரியர் கு. சிவமணி அவர்களின் எண்பதாம் அகவைப் பிறந்தநாள் விழா



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு. சிவமணி அவர்களின் எண்பதாம் அகவைப் பிறந்தநாள் விழா செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 08.09.2011 அன்று மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

இவ்விழாவிற்குச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் ச. மோகன் தலைமையேற்றார். முனைவர் மே.து. இராசுகுமார் வரவேற்புரையாற்றினார். பேராசிரியர் க. இராமசாமி, பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி, பேராசிரியர் ப. மருதநாயகம், முனைவர் கா.கோ. வேங்கடராமன், முனைவர் இரெ. குமரன், முனைவர் ச. மனோகரன், முனைவர் அன்னிதாமசு, பேராசிரியர் இரா. கோதண்டராமன், முனைவர் மு. முத்துவேலு (பதிவாளர்), திரு பை.வெ. கருணாகரன் (நிதி அலுவலர்) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பேராசிரியர் கு. சிவமணி ஏற்புரையாற்றினார். முனைவர் ந. அரணமுறுவல் நன்றி நவின்றார். இவ்விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கல்விசார் பணியாளர்களான இணை ஆய்வறிஞர்கள், முதன்மை ஆய்வு வளமையர்கள், முதுநிலை ஆய்வு வளமையர்கள், இளநிலை ஆய்வு வளமையர்கள், முனைவர் பட்ட மேலாய்வாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

கூட்டம்1

## செம்மொழித் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்புக்கான பாடத்திட்டக் குழுக் கூட்டம்

திருவாரூரில் உள்ள தமிழ்நாடு நடுவண் பல்கலைக் கழகத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் கூட்டு முயற்சியோடு நடத்தவுள்ள செம்மொழித் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்புக்கான பாடத்திட்டக் குழுக் கூட்டம் 22.02.2011 அன்று காலை 10.30 மணியளவில் தூய ஜார்ஜ் கோட்டையில் உள்ள பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலக மாநாட்டுக் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டோர் விவரம் வருமாறு:

**பேராசிரியர் பி.பி. சஞ்சய்,** துணைவேந்தர், தமிழ்நாடு நடுவண் பல்கலைக்கழகம், திருவாரூர்

**பேராசிரியர் ச. மோகன்,** இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

**பேராசிரியர் வி.கே. ஸ்ரீதர்,** பதிவாளர், தமிழ்நாடு நடுவண் பல்கலைக்கழகம், திருவாரூர்

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி,** முதுநிலை ஆய்வறிஞர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

**பேராசிரியர் இரா. கோதண்டராமன்,** ஆய்வறிஞர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

**பேராசிரியர் அ.அ. மணவாளன்,** ஆட்சிக்குழு உறுப்பினர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

**பேராசிரியர் புரொபல் தாஸ்குப்தா,** மொழியியல் ஆராய்ச்சிப் பிரிவு, இந்தியப் புள்ளியியல் நிறுவனம், கொல்கத்தா

**பேராசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி,** சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

**பேராசிரியர் பொன். சுப்பையா,** இணை இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

**பேராசிரியர் கி. நாச்சிமுத்து,** மொழி, இலக்கியம், பண்பாட்டு ஆய்வுகள் பள்ளி, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி

**பேராசிரியர் பெ. மாதையன்,** பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

இந்தக் கூட்டத்தில் பாடத்திட்டக் குழு சார்பில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. செம்மொழித் தமிழ் முதுகலைப் பட்டப்படிப்பு பலதுறைக் கூறுகள் சார்ந்ததாக இருத்தல் வேண்டும்.
2. திராவிட மொழிகள், திராவிடம் அல்லாத மொழிகளின் இலக்கியக் கூறுகளைப் பாடத்திட்டத்தில் சேர்ப்பதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும்.
3. இந்திய மொழிகளில் சமற்கிருதம், இந்தி, வங்காளம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியவற்றில் ஏதேனும் ஒரு மொழியைக் கட்டாயப் பாடமாகப் பாடத்தில் சேர்க்க வேண்டும்.
4. சோதனையிடல் மதிப்பிடல் முறைகளைப் பரிசீலித்தல்.
5. கணினிப் பயன்பாட்டினை ஒரு பாடமாகப் பாடத்திட்டத்தில் சேர்த்தல்
6. பயன்பாட்டு ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் பாடத்திட்டத்தில் சேர்த்தல்.
7. ஆய்வு முறையியலைப் பாடத்திட்டத்தில் சேர்க்க ஏற்பாடு செய்யவேண்டும்.
8. ஆய்வேடு ஒப்படைத்தலை விருப்பப் பாடமாகவோ முதுகலைப் பட்டப்படிப்பின் ஒரு பகுதியாகவோ சேர்ப்பதைப் பரிசீலித்தல்.
9. செம்மொழித் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பில் குறைந்த பட்சம் 15 மாணவர்களையும் அதிகபட்சம் 20 மாணவர்களையும் சேர்க்கலாம்.
11. 2011 -12ஆம் கல்வியாண்டில் முதுகலைச் செம்மொழித் தமிழ்ப் பட்டப் படிப்பைத் தொடங்கலாம்.
12. பேராசிரியர் புரொபல் தாஸ்குப்தா, பேராசிரியர் க. இராமசாமி, பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி, பேராசிரியர் இரா. கோதண்டராமன் ஆகியோர் அடங்கிய குழு முதுகலைச் செம்மொழித் தமிழ்ப் பாடத்தின் இறுதி வரைவை உருவாக்கலாம்.
13. இப்பாடத்திட்டம் தமிழ்நாடு நடுவண் பல்கலைக்கழகக் கல்விக் குழுவின் முன்னிலையில் வைக்கப்பெற்று அதன் ஒப்புதலைப் பெறவும் பாடத்தில் மாற்றத்தை மேற்கொள்ளவும் வேண்டும்.

★

கூட்டம் 2

## குறுந்திட்டப் பணிகள் மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நிறைவுற்ற, நிறைவுக்குரிய ஆய்வுத் திட்டப் பணிகளை மதிப்பிடும் மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்கள் 23.02.2011, 12.04.2011, 20.08.2011, 01.10.2011, 09.11.2011, 19.12.2011 ஆகிய நாட்களில் நடைபெற்றன. இக்கூட்டங்களில் இயக்குநர் தலைமையேற்றார். பேராசிரியர் அன்னிதாமசு ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார். பேராசிரியர் க. இராமசாமி, பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி, பேராசிரியர் ப. மருதநாயகம், பேராசிரியர் கு. சிவமணி ஆகியோர் உறுப்பினர்களாகக் கலந்துகொண்டனர். இக்கூட்டங்களில் மதிப்பிடப்பெற்ற திட்டப்பணி அறிக்கைகள் வருமாறு:

### 23.02.2011

1. *முனைவர் ஆறு. இராமநாதன் - தமிழ்ச் செவ்விலக்கியங்களும் நாட்டுப்புற வழக்காறுகளும்*
2. *முனைவர் வ. ஞானசுந்தரம் - தமிழகப் பழங்குடியினரின் கிளைமொழிகள் - ஆய்வு*
3. *முனைவர் வீ. சந்திரன் - பழந்தமிழர் சட்ட அமைப்பும் நீதி நிருவாகமும்*

### 12.04.2011

1. *முனைவர் எஸ்.ஏ. வீரபாண்டியன் - தமிழ்ச் செவ்வியல் நூல்களில் இசை (திருக்குறள்)*

2. திரு ஜி. சுந்தர் - சிந்துவெளி ஆய்வகத்தில் சிந்து எழுத்து ஆய்வு மையம் அமைத்தல்

**03.06.2011**

1. முனைவர் சி. சுப்பிரமணியம் - சங்க இலக்கியச் சொற்பொருள் தொடரடைவு (பத்துப்பாட்டு)
2. முனைவர் வி.சி. சசிவல்லி - நற்றிணைத் தொடரடைவு
3. முனைவர் ச. குருசாமி - தெய்வச்சிலையார் உரைநெறி
4. முனைவர் வேங்கடசுப்புராய நாயகர் - குறுந்தொகை பிரெஞ்சு மொழிபெயர்ப்பு
5. முனைவர் பி.டி.ஆர். கமலை தியாகராசன் - தமிழ் இசைக் கருவிகளும் ஐரோப்பிய இசைக்கருவிகளும் ஒப்பீடு

**20.08.2011**

1. முனைவர் கு. முருகேசன் - கலித்தொகையில் காட்சிமொழியும் நாடகக் கூறுகளும்
2. முனைவர் மு. முகம்மது அலிஜின்னா - திருக்குறளும் திருக்குர்ஆனும் ஓர் உயர்நிலை ஒப்பாய்வு
3. முனைவர் சண்முக. செல்வகணபதி - சிலப்பதிகாரம் வழி அறியலாகும் ஆடல் அரங்கேற்ற நுட்பங்கள்
4. முனைவர் வெ.மு. ஷாஜகான்கனி - திணை வரலாற்றில் நாடக வரலாறு
5. முனைவர் கே. ஏ.கே. வேங்கடாச்சாரி - இந்தியச் சமயச் சடங்குகளுக்குத் தமிழ்ச் செவ்விலக்கியக் கொடை
6. முனைவர் ஸ்ரீகுமார் - குமரி மாவட்டத்தில் வாழும் செவ்வியற்றமிழ்க் கூறுகள்
7. முனைவர் க. நெடுஞ்செழியன் - பதினெண்கீழ்க்கணக்கு இலக்கியங்களில் மெய்யியல் கோட்பாடுகள்
8. பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன் - முன் வரலாற்றுக்காலம் (சங்ககாலம் கி.மு. 300 முதல் கி.பி.300 வரை) முதல் முன்னிடைக்காலம் (கி.பி.600-1300) வரையிலான கல்வெட்டுக்களின் கருத்தமைவுத் தொடரடைவு
9. முனைவர் கி. நாச்சிமுத்து, முனைவர் எச். பாலசுப்பிரமணியன் - தொல்காப்பிய இந்தி மொழிபெயர்ப்பு
10. முனைவர் கா. இராஜன் - சங்க காலப் பொருந்தல் - அகழாய்வு
11 முனைவர் ச. கார்லோஸ் - வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாட்டு அணுகுமுறையில் சங்க இலக்கிய ஆய்வு
12. டபிள்யு. லிண்டா கிறிஸ்டி - துளு, கொடவ மற்றும் கொங்கணி மக்களின் பண்பாட்டுப் பின்னணியில் சங்க இலக்கியம்
13. திரு எம். பாலசுப்பிரமணியன், திரு நா. மம்மது - தமிழ்த் திணையியல் களஞ்சியம்
14. முனைவர் தி. மகாலட்சுமி - சிலப்பதிகார இலக்கியக் களஞ்சியம்
15. இயக்குநர், தொல்லியல் துறை - தமிழ்க் கல்வெட்டுக்கள் (20000)- மின் நிழற்படம்
16. முனைவர் மு. சற்குணவதி - மணிமேகலைக் களஞ்சியம்

**01.10.2011**

1. முனைவர் அ. பஷீர் அகமது - திருக்குறள் அரபு மொழிபெயர்ப்பு
2. முனைவர் சி. இரவீந்திரன் - பழந்தமிழ்ச் சமூகத்தில் நிகழ்த்துக்கலைகள்
3. முனைவர் ச. சிவகாமி - சிலம்பில் தொல்காப்பியம்
4. முனைவர் க. செல்லப்பன் - தமிழ் கிரேக்கச் செவ்விலக்கியத்தில் அறவியலும் முருகியலும் - ஒப்பீட்டாய்வு
5. திரு எஸ். பத்மநாபன் - தொல்தமிழ்ப் பண்பாட்டில் உலோகவியல்
6. திரு அடிகளாசிரியன் - தொல்காப்பிய ஆய்வு
7. திருமிகு பி. உஷாதேவி - தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் இயக்கப்படங்கள்
8. முனைவர் ஜெயலலிதா - தொல்காப்பியம் - கன்னட மொழிபெயர்ப்பு
9. முனைவர் இளமதி சானகிராமன் - பண்டைய இலக்கண இலக்கியங்களில் மெய்ப்பாடுகள்
10. முனைவர் அ.கா. பெருமாள், திரு செந்தீ நடராசன் - பழந்தமிழர் பண்பாட்டு நினைவுச் சின்னங்கள்
11. முனைவர் பி. சுபாஷ் சந்திர போஸ் - சங்க இலக்கியத்தில் கடல் வணிகமும் பண்பாட்டுப் பரிமாற்றங்களும்
12. திரு பூரண சந்திர ஜீவா - சங்ககாலத் தமிழியும் சிந்து எழுத்தும்

**09.11.2011**

1. மருத்துவர் பெ. மதியழகன் - கால்நடை வளர்த்தலும் பராமரிப்பும் - தமிழக வட்டார வழக்குகள்
2. முனைவர் கோ. சங்கரநாராயணன் - பரிபாடல் தொடரடைவு
3. முனைவர் இரா. சீனிவாசன் - சங்க இலக்கியம் - கன்னட மொழிபெயர்ப்பு (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு)
4. பேராசிரியர் உள்ளூர் பரமேஸ்வரன் - ஐங்குறுநூறு மலையாள மொழிபெயர்ப்பு
5. முனைவர் க. இரத்னம் - செம்மொழி இலக்கியங்களில் பறவைகள்
6. பேராசிரியர் சு. அழகேசன் - சங்க இலக்கிய உரையாசிரியர்கள் உணர்த்தும் இலக்கணக் குறிப்புகள்: தொகுப்பும் ஆய்வும்

**19.12.2011**

1. முனைவர் மேரி பியர் அகஸ்டின் - நாலடியார் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு
2. முனைவர் இந்திரா மனுவேல் - கலித்தொகை மரபும் மாற்றமும்: நுண்ணாய்வு
3. முனைவர் என். ஜெயபிரகாஷ் - கச்சாயணம்: பாலி இலக்கணம்- மொழிபெயர்ப்பும் தொல்காப்பிய ஒப்பீடும்

4. *பேராசிரியர் அ. சண்முகதாஸ்* - சங்க இலக்கியம் சிங்கள மொழிபெயர்ப்பு
5. *முனைவர் எம். ஆர். சஃப்ரா பேகம்* - புறநானூறு உருது மொழிபெயர்ப்பு
6. *திரு எஸ். முகம்மது யூசுப்* - நாலடியார் அறநூலின் மலையாளக் கவிதை மொழியாக்கம்

★

**கூட்டம் 3**

## ஆய்வுத் திட்ட நிதிநல்கை: தெரிவுக் குழுக்கூட்டங்கள்

அ) 2011-12 ஆம் ஆண்டு நிதிநல்கைக்கான ஆய்வுத் திட்டங்களைத் தெரிவு செய்வதற்கு முதற்கட்டத் தெரிவுக்குழு 05.07.2011ஆம் நாள் நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி (முதுநிலை ஆய்வறிஞர்), பேராசிரியர் கு. சிவமணி (ஆய்வறிஞர்), பேராசிரியர் க. இராமசாமி (பொறுப்பு அலுவலர்), முனைவர் அன்னிதாமசு (ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் குறுந்திட்ட ஆய்வு மேற்கொள்ள விண்ணப்பிக்கப் பெற்றிருந்த 92 ஆய்வுத் திட்டங்களிலிருந்து 35 ஆய்வுத் திட்டங்கள் தெரிவு செய்யப்பெற்று ஆய்வாளர்களை வல்லுநர் குழுவின் முன் ஆய்வுத் திட்டத்தினை வழங்க அழைப்பதென முடிவுசெய்யப்பட்டது.

ஆ) 2011-12 ஆம் ஆண்டு நிதிநல்கைக்குரிய ஆய்வுத் திட்டங்களின் இரண்டாம் பட்டியலைத் தெரிவு செய்வதற்கு முதற்கட்டத் தெரிவுக் குழுக் கூட்டம் 01.12.2011 ஆம் நாள் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி (முதுநிலை ஆய்வறிஞர்), பேராசிரியர் ப. மருதநாயகம் (ஆய்வறிஞர்), பேராசிரியர் கு. சிவமணி (ஆய்வறிஞர்) முனைவர் அன்னிதாமசு (ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் குறுந்திட்ட ஆய்வு மேற்கொள்ள விண்ணப்பிக்கப் பெற்றிருந்த 39 ஆய்வுத் திட்டங்களிலிருந்து 7 ஆய்வுத் திட்டங்கள் தெரிவு செய்யப்பெற்று ஆய்வாளர்களை வல்லுநர் குழுவின் முன் ஆய்வுத் திட்டத்தினை வழங்க அழைப்பதென முடிவுசெய்யப்பட்டது.

★

**கூட்டம் 4**

## கருத்தரங்குகள், பயிலரங்குகளைத் தேர்வு செய்யும் குழுக் கூட்டங்கள்

அ) கல்வி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கருத்தரங்க, பயிலரங்கத் திட்டப் பணிகளைத் தெரிவு செய்யும் வல்லுநர் குழுக் கூட்டம் 26.07.2011 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. பின்வரும் உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

**பேராசிரியர் ச.மோகன்** (இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தலைவர்)

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி** (முதுநிலை ஆய்வறிஞர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்)

**பேராசிரியர் சோ.ந. கந்தசாமி** (புறவல்லுநர்)





**பேராசிரியர் மா. நன்னன்** (புறவல்லுநர்)

**பேராசிரியர் பெ. மாதையன்** (புறவல்லுநர்)

**பேராசிரியர் வ. ஜெயதேவன்** (புறவல்லுநர்)

**பேராசிரியர் தி. முருகரத்தனம்** (புறவல்லுநர்)

**பேராசிரியர் இரா. கோதண்டராமன்** (ஒருங்கிணைப்பாளர்)

**பேராசிரியர் க. இராமசாமி** (பொறுப்பு அலுவலர், நடத்துநர்)

இக்கூட்டத்தில் 21 நிறுவனங்களுக்குக் கருத்தரங்க நிகழ்ச்சி நடத்தவும் 16 நிறுவனங்களுக்குப் பயிலரங்க நிகழ்ச்சி நடத்தவும் நிதியுதவி வழங்க முடிவுசெய்யப்பட்டது.

ஆ) கல்வி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கருத்தரங்க, பயிலரங்கத் திட்டப் பணிகளைத் தெரிவு செய்யும் வல்லுநர் குழுக் கூட்டம் 26.11.2011 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. பின்வரும் உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

**பேராசிரியர் இரா. ஞானமூர்த்தி** (இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தலைவர்)

**பேராசிரியர் சோ.ந. கந்தசாமி** (புறவல்லுநர்)

**பேராசிரியர் மா. நன்னன்** (புறவல்லுநர்)

**பேராசிரியர் பெ. மாதையன்** (புறவல்லுநர்)

**பேராசிரியர் வ. ஜெயதேவன்** (புறவல்லுநர்)

**பேராசிரியர் தி. முருகரத்தனம்** (புறவல்லுநர்)

**பேராசிரியர் இரா. கோதண்டராமன்** (ஒருங்கிணைப்பாளர்)

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி** (முதுநிலை ஆய்வறிஞர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், நடத்துநர்)

இக்கூட்டத்தில் 19 நிறுவனங்களுக்குக் கருத்தரங்க நிகழ்ச்சி நடத்தவும் 7 நிறுவனங்களுக்குப் பயிலரங்க நிகழ்ச்சி

நடத்தவும் நிதியுதவி வழங்க முடிவுசெய்யப்பட்டது.

★

கூட்டம் 5

## குறுந்திட்டப் பணிகள்: வல்லுநர் குழுக் கூட்டம்

2011-12ஆம் ஆண்டின் நிதிநல்கைக்கான ஆய்வுத்திட்டங்களைத் தெரிவுசெய்யும் வல்லுநர் குழுக் கூட்டம் நிறுவனத்தில் 27.07.2011, 28.07.2011 ஆகிய இரு நாட்களில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயக்குநர் தலைமையில்

**பேராசிரியர் மா. நன்னன்**

**பேராசிரியர் மு.பி. பாலசுப்பிரமணியன்**

**பேராசிரியர் வ. ஜெயதேவன்**

**பேராசிரியர் ப. மருதநாயகம்**

**பேராசிரியர் க. இராமசாமி**

**முனைவர் அன்னிதாமசு** (ஒருங்கிணைப்பாளர்)

ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நேர்முக அழைப்பில் கலந்துகொண்ட ஆய்வாளர்களுடனான கலந்துரைக்குப்பின் 20 ஆய்வுத் திட்டங்கள் நிதிநல்கைக்குத் தெரிவு செய்யப்பட்டன.

2011-12ஆம் ஆண்டு நிதி நல்கைக்குரிய இரண்டாம் பட்டியலின் ஆய்வுத் திட்டங்களைத் தெரிவு செய்யும் வல்லுநர் குழுக் கூட்டம் 30.12.2011ஆம் நாள் நிறுவனத்தில் நடைபெற்றது. இக்குழுவில்

**பேராசிரியர் அ.அ. மணவாளன்**

**பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்**

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**

**பேராசிரியர் ப. மருதநாயகம்**

**பேராசிரியர் க. இராமசாமி**

**முனைவர் அன்னிதாமசு** (ஒருங்கிணைப்பாளர்),

**முனைவர் மு. முத்துவேலு** (உறுப்பினர், பதிவாளர்)

ஆகியோர் கலந்துகொண்டனர். அழைக்கப்பெற்றிருந்த அறுவரில் ஐந்து ஆய்வாளர்களின் ஆய்வுத் திட்டங்கள் நிதிநல்கைக்குத் தெரிவுசெய்யப்பட்டன.

2011-12ஆம் ஆண்டு நிதிநல்கைக்குத் தெரிவு செய்யப்பெற்ற ஆய்வுத் திட்டங்கள்

1. ஏ. காமாட்சிநாதன் - சங்கத் தமிழ்ச் செவ்வியல் நூற்சொல்லடைவு





2. ஆ.இரா. வேங்கடாசலபதி - டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களுக்கு வந்த கடிதத் தொகுப்பு (1860-1942)
3. எஸ். சுஜாதா - விளவங்கோடு வட்டார வழக்குச் சொல்லகராதி
4. செம்மல் சையது மீரசா - Anaylysis of the sycho physiological insights in Tirukkural
5. ஆ. மணவழகன் - பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பல்துறை அறிவும் துறைசார் மேலாண்மையும்
6. சி. திருமுருகன் - நற்றிணை பிரெஞ்சு மொழிபெயர்ப்பு
7. என். முருகேசன் - Documentation of Buddhists sights and Monuments in Tamil Nadu with reference to Classical Literature
8. க. சுசீலா - பண்டைய காலத் தமிழக ஊழிய மாந்தர் வாழ்வியல் (பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்)
9. பி. கிருஷ்ணமூர்த்தி - Concept of Human rights in Ancient Tamil Literature
10. ஆ. மணி - பழந்தமிழ் இலக்கண இலக்கிய உரைகளில் குறுந்தொகை
11. எம். கோவிந்தராஜன் - சங்க இலக்கிய இந்தி மொழிபெயர்ப்பு
12. எஸ். சுப்பிரமணியம், எஸ். இராசாராம் - Online Encyclopedia of Classical Tamil grammatical terms
13. தி. சுப்பிரமணியன் - தமிழரின் பண்பாட்டு வரலாற்றில் சங்ககால இலக்கியமும் பெருங்கற்காலச் சின்னங்களும்
14. எஸ். சுபாஷ் சந்திர போஸ் - செம்மொழித் தமிழ் நூல்களில் வினைவழிப் பெயர்கள்
15. எம். கோவிந்தராசு, பி. மாரியப்பன் - செவ்வியல் இலக்கியங்களில் ஊர்வன
16. பழ. முத்தப்பன் - சங்க இலக்கியத்தில் சைவ சமய மூலக்கூறுகள்
17. டி. வேலப்பன் - Economic life and thought of the Sangam Tamils
18. எம். சாதிக் பாட்சா - 1850 முதல் 2010 வரையிலான தமிழ்ச் செவ்வியல் இலக்கிய ஆராய்ச்சி நூல் தொகுப்பு
19. எஸ். சிவமணி - சங்க இலக்கியத்தில் திணைமயக்கம்
20. ஆ. ஆலிஸ் - அமைப்பியல் நோக்கில் சங்க இலக்கியம்
21. எச். அனார்கலி - சங்க இலக்கியத்தில் சுற்றுப்புறச் சூழலும் பெண்களும்

22. **ஆர். சந்திரசேகரன்** - சங்ககாலத் தமிழர் அரசியலும் அக்கால உலக அரசியல் தத்துவங்களும்
23. **எஸ். கணேஷ்ராம்** - Iconography of the Twin Epics
24. **வி. ஜெயலக்ஷ்மி** - பெருங்கதையில் சங்க இலக்கியக் கூறுகள்
25. **வி.செடிப்பவுன்** - செவ்வியல் நூல்களில் குழந்தைச் சித்திரிப்பு

★

கூட்டம் 6

## முனைவர் பட்ட ஆய்வு, முனைவர் பட்ட மேலாய்வு உதவித்தொகை நேர்காணலும் தேர்வுக் குழுக் கூட்டமும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் எழுத்துத் தேர்வில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு முனைவர் பட்ட ஆய்வு, முனைவர் பட்ட மேலாய்வு உதவித் தொகை வழங்குவதற்கான நேர்காணலும் தேர்வுக் குழுக் கூட்டமும் 14.11.2011 முதல் 16.11.2011 வரை நடைபெற்றது. இக்குழுவில் இடம்பெற்றோர்:

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி** - பொறுப்பு அலுவலர், உறுப்பினர்

**பேராசிரியர் அ.அ. மணவாளன்** - ஆட்சிக்குழு உறுப்பினர்

**பேராசிரியர் வ. ஜெயதேவன்** - புற வல்லுநர்

**பேராசிரியர் ப. மருதநாயகம்** - அக வல்லுநர்

**முனைவர் மே.து. இராசுகுமார்** - ஒருங்கிணைப்பாளர்

எழுத்துத் தேர்வில் தேர்ச்சிபெற்ற 32 மாணவர்கள் முனைவர் பட்ட ஆய்வு உதவித் தொகைக்கான நேர்முகத்



தேர்விலும் 3 மாணவர்கள் முனைவர் பட்ட மேலாய்வு உதவித்தொகைக்கான நேர்முகத் தேர்விலும் கலந்துகொண்டனர்.

★

கூட்டம் 7

## செம்மொழித் தமிழ்ப் பன்னாட்டு இதழ்க் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழ்ப் பன்னாட்டு இதழ்க் குழுக் கூட்டம் 15.12.2011 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டனர்.

**பேராசிரியர் அ.அ. மணவாளன்** (ஆட்சிக் குழு உறுப்பினர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்)

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி** (முதுநிலை ஆய்வறிஞர், இலக்கியத் துறைத் தலைவர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்)

**பேராசிரியர் ப. மருதநாயகம்** (ஆய்வறிஞர், மொழிபெயர்ப்புத் துறைத் தலைவர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்)

**திரு ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப.** (சிந்துவெளி ஆய்வாளர்)

**பேராசிரியர் இரா. கோதண்டராமன்** (ஆய்வறிஞர், மொழித்துறைத் தலைவர், ஒருங்கிணைப்பாளர்)

இக் குழுக் கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் உறுப்பினர்களால் ஒருமனதாக எடுக்கப்பட்டன.

1. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் முதன்மை ஆசிரியராக இருப்பார்

2. இக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் நிர்வாக ஆசிரியராக இருப்பார்.

3. இவ்விதழ் இதழ் இருமொழி (தமிழ், ஆங்கிலம்) இதழாகவும் அரையாண்டு இதழாகவும் (சனவரி, சூலை) ஒவ்வோராண்டும் வெளிவரும்.

4. செம்மொழித் தமிழ்ப் பன்னாட்டு இதழ் ஆசிரியர் குழுவில் அதிகபட்சமாகப் பதினோரு உறுப்பினர்கள் இருக்கலாம். அவ்வுறுப்பினர்கள் இலக்கியம், கல்வெட்டியல், மொழியியல், பண்பாட்டு மாந்தவியல் முதலிய துறைகளில் வல்லுநராகவும் உள்நாடு அல்லது அயல்நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களாகவும் இருக்கலாம். பின்வரும் அறிஞர்கள் ஆசிரியர் குழுவில் இடம்பெற இதழ்க் குழு பரிந்துரைக்கிறது.

**திரு அஸ்கோ பர்போலா**
**திரு ஜாரோஸ்லாவ் வாசெக்**
**பேராசிரியர் கா. இராஜன்**
**திரு பி. கோபிநாதன் நாயர்**
**பேராசிரியர் உதய நாராயண சிங்**
**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**பேராசிரியர் சோ.ந. கந்தசாமி**
**முனைவர் தி.ப. சித்தலிங்கையா**
**பேராசிரியர் க. இராமசாமி**
**பேராசிரியர் அ.அ. மணவாளன்**

5. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் அன்னிதாமசு இவ்விதழின் இணையாசிரியராக இருப்பார்.

6. செம்மொழித் தமிழ்ப் பன்னாட்டு இதழ் 128 பக்கங்களைக் கொண்டதாக இருக்கும்.

7. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இதழின் உற்பத்திச் செலவினைப் பொறுத்து இதழின் ஆண்டுக் கட்டணம் அல்லது ஐந்தாண்டுக் கட்டணத்தையும் வெளிநாடுகளுகளுக்கு அனுப்புவதற்கான அஞ்சல் செலவுக் கட்டணத்தையும் நிர்ணயிக்கலாம்.

8. இதழ் 1/4 கிரவுன் அளவில் இருக்கும்.

# செம்மொழி ஆய்வு வட்டக் கூட்டங்கள்

*நாள்: 31-03-2011*

தலைமை: பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி

ஆய்வாளர்: **பேராசிரியர் க. இராமசாமி**

பொருள்: செம்மொழி-கொள்கைகள், நோக்கங்கள், செயல்பாடுகள்



*நாள்: 07-04-2011*

தலைமை: பேராசிரியர் ப. மருதநாயகம்

ஆய்வாளர்: **பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**

பொருள்: ஆய்வு நெறிமுறைகள்



*நாள்: 21-04-2011*

தலைமை: பேராசிரியர் இரா. கோதண்டராமன்

ஆய்வாளர்: **பேராசிரியர் ப. மருதநாயகம்**

பொருள்: தமிழின் செவ்வியல் தகுதி



*நாள்: 28-04-2011*

தலைமை: பேராசிரியர் க. இராமசாமி

ஆய்வாளர்: **முனைவர் கா. கோ. வேங்கடராமன்**

பொருள்: தொல்காப்பியரின் புணர்ச்சிக் கோட்பாடு



*நாள்: 05-05-2011*

தலைமை: முனைவர் ந. அரணமுறுவல்

ஆய்வாளர்: **முனைவர் ச. மனோகரன்**

பொருள்: தமிழ் வழக்காறுகளும் வழக்காற்றுச் சொல் அகராதிகளும்



*நாள்: 12-05-2011*

தலைமை: முனைவர் ச. மனோகரன்

ஆய்வாளர்: **முனைவர் இரெ. குமரன்**

பொருள்: ஆய்வுக் களங்கள்



*நாள்: 19-05-2011*

தலைமை: முனைவர் அன்னி தாமசு

ஆய்வாளர்: **முனைவர் ந. முருகையன்**

பொருள்: செம்மொழி இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்: சிக்கல்களும் தீர்வுகளும்



*நாள்: 26-05-2011*

தலைமை: முனைவர் மே.து. இராசுகுமார்

ஆய்வாளர்: **முனைவர் வாணி அறிவாளன்**

பொருள்: மீள்வாசிப்பு நோக்கில் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் (நெய்தல்)



# செம்மொழி ஆய்வு வட்டக் கூட்டங்கள்

*நாள்: 02-06-2011*

தலைமை: முனைவர் கா. கோ. வேங்கடராமன்

ஆய்வாளர்: **முனைவர் கோ. பழனிராஜன்**

பொருள்: தொல்காப்பியத்தில் நிகழ்வெண் ஆய்வு



*நாள்: 09-06-2011*

தலைமை: பேராசிரியர் க. இராமசாமி

ஆய்வாளர்: **பேராசிரியர் இரா. கோதண்டராமன்**

பொருள்: வினை வலிது



*நாள்: 16-06-2011*

தலைமை: பேராசிரியர் கு. சிவமணி

ஆய்வாளர்: **முனைவர் அன்னி தாமசு**

பொருள்: தமிழும் எபிரேயமும்- சில ஒற்றுமை வேற்றுமைகள்



*நாள்: 23-06-2011*

தலைமை: பேராசிரியர் ப. மருதநாயகம்

ஆய்வாளர்: **முனைவர் ந. அரணமுறுவல்**

பொருள்: தமிழ் : பத்தாயிரம் ஆண்டை விஞ்சிய தொன்மை



*நாள்: 30-06-2011*

தலைமை: பேராசிரியர் க. இராமசாமி

ஆய்வாளர்: **முனைவர் மு. ராமகிருஷ்ணன்**

பொருள்: மொழியும் பண்பாடும் -சில குறிப்புகள்



*நாள்: 07-07-2011*

தலைமை: முனைவர் ந. அரணமுறுவல்

ஆய்வாளர்: **முனைவர் ஜெ. அரங்கராஜ்**

பொருள்: தமிழில் மேற்கோள் ஆய்வுகள்



*நாள்: 15-07-2011*

தலைமை: பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி

ஆய்வாளர்: **பேராசிரியர் கு. சிவமணி**

பொருள்: தொல்காப்பியப் பாயிரம் - ஓர் ஆய்வு -1



*நாள்: 21-07-2011*

தலைமை: பேராசிரியர் ப. மருதநாயகம்

ஆய்வாளர்: **பேராசிரியர் கு. சிவமணி**

பொருள்: தொல்காப்பியப் பாயிரம் - ஓர் ஆய்வு - 2



# செம்மொழி ஆய்வு வட்டக் கூட்டங்கள்

*நாள்: 29-07-2011*

தலைமை: முனைவர் இரெ. குமரன்

ஆய்வாளர்: முனைவர் த. பூவை சுப்பிரமணியன்

பொருள்: குலக்குறி நோக்கில் சங்க இலக்கியம்



*நாள்: 04-08-2011*

தலைமை: முனைவர் கா. கோ. வேங்கடராமன்

ஆய்வாளர்: முனைவர் சி. கார்த்திகேயன்

பொருள்: திருமுருகாற்றுப்படையில் முருகனின் ஆறு ஆடல்கள்



*நாள்: 11-08-2011*

தலைமை: முனைவர் ச. மனோகரன்

ஆய்வாளர்: முனைவர் மு. செல்வதுரை

பொருள்: வட்டார வழக்குச் சொற்களில் முந்திரி



*நாள்: 18-08-2011*

தலைமை: முனைவர் அன்னி தாமசு

ஆய்வாளர்: முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்

பொருள்: வேதாகம வழக்குச் சொற்கள்



*நாள்: 25-08-2011*

தலைமை: பேராசிரியர். க. இராமசாமி

ஆய்வாளர்: முனைவர் சு. இராசவேல்

பொருள்: அண்மைத் தொல்லியல் கண்டுபிடிப்புகளின்வழிச் சங்க காலம்



*நாள்: 15-09-2011*

தலைமை: பேராசிரியர் இரா. கோதண்டராமன்

ஆய்வாளர்: முனைவர் மே.து. இராசுகுமார்

பொருள்: சமூக-பொருளியல் பார்வையில் சங்கப் பாடல்கள்



*நாள்: 22-09-2011*

தலைமை: முனைவர் இரெ. குமரன்

ஆய்வாளர்: முனைவர் கு. அரசேந்திரன்

பொருள்: தமிழும் இந்தோ ஐரோப்பிய மொழிகளும்



*நாள்: 29-09-2011*

தலைமை: முனைவர் கா. கோ. வேங்கடராமன்

ஆய்வாளர்: முனைவர் கு. ஜெயகுமாரி

பொருள்: விளவங்கோடு வட்டார வழக்காறுகளில் வேற்றுமை உருபுகள்



# செம்மொழி ஆய்வு வட்டக் கூட்டங்கள்

*நாள்: 13-10-2011*

*தலைமை: பேராசிரியர் கு. சிவமணி*

*ஆய்வாளர்: **முனைவர் ம.ச. நாகராஜன்***

*பொருள்:* The Banian and the Oak



*நாள்: 20-10-2011*

*தலைமை: முனைவர் கா. கோ. வேங்கடராமன்*

*ஆய்வாளர்: **முனைவர் நா. ஆனந்தி***

*பொருள்: புறநானூற்றில் உணவு-சொல்லாய்வு*



*நாள்: 03-11-2011*

*தலைமை: முனைவர் ந. அரணமுறுவல்*

*ஆய்வாளர்: **முனைவர் கோ. சீனிவாசன்***

*பொருள்:மல்லச்சந்திரம் பெருங்கற்கால ஈமச் சின்னங்களின் தொழில்நுட்பம்*



*நாள்: 17-11-2011*

*தலைமை: பேராசிரியர் இரா. கோதண்டராமன்*

*ஆய்வாளர்: **முனைவர் க. ஜவகர்***

*பொருள்: திணைக்கோட்பாட்டு நோக்கில் ஹெமிங்வேயின் கிழவனும் கடலும்*



*நாள்: 24-11-2011*

*தலைமை: பேராசிரியர் கு. சிவமணி*

*ஆய்வாளர்: **திரு. சிவ. பாலசுப்பிரமணி (ஒரிசா பாலு)***

*பொருள்: பழந்தமிழரின் கடல் மேலாண்மை*



*நாள்: 02-12-2011*

*தலைமை: பேராசிரியர் அன்னி தாமசு*

*ஆய்வாளர்: **முனைவர் ப. கிருஷ்ணமூர்த்தி***

*பொருள்: இறையனார் களவியல் உரையின் இலக்கிய இன்றியமையாமை*



*நாள்: 08-12-2011*

*தலைமை: பேராசிரியர் ப. மருதநாயகம்*

*ஆய்வாளர்: **முனைவர் ம. சோ. விக்டர்***

*பொருள்: மொழியியல் ஆய்வு வரலாறு*



*நாள்: 15-12-2011*

*தலைமை: பேராசிரியர் கு. சிவமணி*

*ஆய்வாளர்: **முனைவர் பி. மஞ்சுளா***

*பொருள்: பழந்தமிழகத்தில் சிவன் குறித்த செய்திகள்*



## செம்மொழி ஆய்வு வட்டக் கூட்டங்கள்





*நாள்: 21-12-2011*

*தலைமை: பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி*

*ஆய்வாளர்: பேரா. அ. சண்முகதாசு*

*பொருள்: ஈழத்துத் தமிழறிஞர்கள் செம்மொழிக்கு ஆற்றிய பங்களிப்பு*

*ஆய்வாளர்: முனைவர் மனோன்மணி சண்முகதாசு*

*பொருள்: செம்மொழித் தமிழும் சப்பானிய மொழியும்*


*நாள்: 29-12-2011*


*தலைமை: பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி*


*ஆய்வாளர்: திரு. இரா. வெங்கடேசன்*


*பொருள்: மொழிக் கல்வியும் தமிழ் இலக்கண நூல்களின் பதிப்புருவாக்கமும்*


# இசைக் குறுவட்டுக்கள்

















**பத்துப்பாட்டு முற்றோதல் (5 தொகுதிகள்) விலை உரூ.250/-**













**தொல்காப்பியம் முற்றோதல் (5 தொகுதிகள்) விலை உரூ.250/-**


**பழந்தமிழ்ப் பாக்கள் மரபுவழிப் படித்தலும் பாடுதலும்**

**(தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு)**

**விலை உரூ.50/-**



# இரங்கற்செய்தி



கார்த்திகேசு சிவத்தம்பி

தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறிந்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் 06.07.2011 அன்று கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் உடல்நலக்குறைவின் காரணமாக இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து பெரிதும் வருந்துகின்றோம்.

சங்க காலம் தொட்டு இக்காலம் வரை தமிழில் வெளிவந்த இலக்கிய, இலக்கண நூல்களில் ஆழ்ந்த புலமையுடையவர் அவர். தமிழ் இலக்கிய உலகில் மார்க்சியத் திறனாய்வு அணுகுமுறையைக் கையாண்டு ஆய்வு செய்த ஒரு சிலரில் குறிப்பிடத் தகுந்தவர் பேராசிரியர் சிவத்தம்பி

பண்டைத் தமிழகத்தில் நாடகம் என்ற தலைப்பில் இங்கிலாந்து பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் தமது முனைவர் பட்டத்தை முடித்தவர். எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் திணைக்களத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய அவர் தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் முதலிய பல்கலைக்கழகங்களில் சிறப்புப் பேராசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

முற்போக்கு இலக்கிய அமைப்புகளோடும் இளம் படைப்பாளிகளோடும் இறுதிவரை நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மாற்றுக் கருத்துடையவர்களோடும் மனங்கோணாது பழகும் இயல்புடையவர்.

பரந்து ஆழ்ந்த படிப்பறிவும் பட்டறிவும் வாய்க்கப்பெற்ற பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் இழப்பு தமிழ் ஆய்வுலகுக்குப் பேரிழப்பாகும்.


பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியை இழந்து வாடும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.








செம்மொழித் தமிழாய்வு
மத்திய நிறுவனத் தலைவர்
நூலகத்தைப் பார்வையிடல்

## செம்மொழித் தமிழ்க் காட்சிக் குறும்படங்கள்




**செம்மொழித் தமிழ்க்**
**காட்சிக் குறும்படங்கள்**
**9 தொகுதிகள்**
**விலை உரூ.450/-**

## நிறுவன வெளியீடுகள்

**Dravidian Comparative Grammar - I** **Rs.350.00**
*P.S. Subrahamanyam*

**சிந்துவெளிப் பண்பாடும் சங்க இலக்கியமும்** **உரூபாய்.50.00**
*ஐராவதம் மகாதேவன்*

**A Dravidian Solution to the Indus Script Problem** **Rs.50.00**
*Asko Parpola*

**செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்** **உரூபாய்.50.00**
*கலைஞர் மு. கருணாநிதி* (தமிழ்)

**செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்** **உரூபாய்.50.00**
*கலைஞர் மு. கருணாநிதி* (ஆங்கிலம்)

**செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்** **உரூபாய்.50.00**
*கலைஞர் மு. கருணாநிதி* (இந்தி)

**Ancient Tamil Poetry and Poetics: New Perpectives** **Rs.450.00**
*P. Marudhanayagam*

**Dynamics of Tamil Finite System** **Rs.650.00**
*R. Kothandaraman*

**A Compendium of Tirukkural Translations in English - Vol.I (Arattuppal)** **Rs.800.00**
*A.A. Manavalan*

**A supplement to Dravidian Etymological Dictionary (R)** **Rs.450.00**
*P.S. Subrahamanyam*

**Narrinai - I** **Rs.850.00**
*V. Murugan*

**Narrinai - II** **Rs.850.00**
*V. Murugan*

**Muttollayiram** **Rs.325.00**
*P. Pandian*

**Nanmanikkatikai** **Rs.200.00**
*N. Murugaiyan*

# பணிக்குழாம்

இயக்குநர்

**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

### ஆராய்ச்சி அலுவலர்கள்

முனைவர் கூ.மு. புவனேஸ்வரி
முனைவர் ந. தேவி
முனைவர் க. நர்மதா
முனைவர் இரா. அருள்மணி
முனைவர் கு. ஜெயகுமாரி

### இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள்

முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
முனைவர் சு. ஏழுமலை
முனைவர் மு. செல்வதுரை
முனைவர் சே. கரும்பாயிரம்
முனைவர் த. சரவணன்
முனைவர் இரா. வெங்கடேசன்
முனைவர் ந. பெரியசாமி

### முதுநிலை ஆய்வு வளமையர்கள்

முனைவர் வ. மாரியப்பன்
முனைவர் ம. தமிழ்வாணன்
முனைவர் அ. ஆரோக்கியதாசு
முனைவர் மா. சுசிலா
முனைவர் ப. கண்ணதாசன்
முனைவர் சுப. வேல்முருகன்

### இளநிலை ஆய்வு வளமையர்கள்

முனைவர் வே. அழகுமுத்து
முனைவர். ம. நாகராஜன்
திருமதி ம. தாமரைச்செல்வி
திரு. து.ச.ரா. ராஜேஷ்குமார்
திரு. கி. கண்ணன்
திரு. கோ. சந்திரசேகர்

### ஆராய்ச்சி உதவியாளர்

முனைவர் சி. இராமச்சந்திரன்

### தொழில்நுட்பப் பணியாளர்கள்

திரு. த. செந்தில்குமார் *(நிரலாளர்)*
திரு. சு. கார்த்திகேயன் *(நிரலாளர்)*
முனைவர். இரா. அகிலன் *(நிரலாளர்)*
திரு. அ. முருக சுவாமிநாதன் *(நிரலாளர்)*
திரு. இரா. சுந்தரகணபதி *(கணினி நிருவகிப்பாளர்)*
திரு. மு. இராசசேகர் *(இணையத்தள வடிவமைப்பாளர்)*

### நிருவாகப் பணியாளர்கள்

திரு. கோ. புண்ணியமூர்த்தி
*(அலுவலகக் கண்காணிப்பாளர்)*
திரு. ஜா.வா. பாஸ்கரன்
*(இளநிலைக் கணக்கு அலுவலர்)*
திரு. மோ. முருகானந்தம் *(முதுநிலை எழுத்தர்)*
திரு. க. சங்கர் *(இளநிலை எழுத்தர்)*
திரு. அ. முருகேசன் *(இளநிலை எழுத்தர்)*
திருமதி இர. நளினா *(இளநிலை எழுத்தர்)*

### தரவு உள்ளீட்டாளர்கள்

திரு. வெ. சிவப்பிரகாசம்
திருமதி சு. கீதா
திரு. தி.ஞா. அருள்ஒளி
திரு. மு. முனியசாமி
திரு. சோ. சரவணன்

### அனுப்புகை உதவியாளர்

திரு. ம. கோவிந்தன்

### பன்னோக்கு உதவியாளர்கள்

திருமதி. ந. ஜெயலட்சுமி
திருமதி. சி. அன்னபூரணி

**தொல்காப்பியம்**

**எட்டுத்தொகை**

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**பத்துப்பாட்டு**

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

**பதினெண்கீழ்க்கணக்கு**

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னா நாற்பது
- இனியவை நாற்பது
- கார் நாற்பது
- களவழி நாற்பது
- ஐந்திணை ஐம்பது
- ஐந்திணை எழுபது
- திணைமொழி ஐம்பது
- திணைமாலை நூற்றைம்பது
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

**சிலப்பதிகாரம்**

**மணிமேகலை**

**முத்தொள்ளாயிரம்**

**இறையனார் களவியல்**

